வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 09.02.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 40 பக்கங்கள் : 12



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# நிகழ்நிலை காப்பு சட்டம்; குறைபாடுகள் உள்ளன!

## சபையில் ஏற்றார் நீதி அமைச்சர்

### கேள்வி கேட்கும் அதிகாரம் உயர்நீதிமன்றுக்கு இல்லை என்றும் சாடல்

கொழும்பு, பெப்ரவரி 09

பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தை கேள்விக்கு உள்ளாக்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்துக்கு கிடையாது. நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் ஒருசில குறைபாடுகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்கிறோம். அதற்காக முழு சட்டத்தையும் தீயிலிட முடியாது. பாராளுமன்றத்தின் ஊடக திருத்தங்களை கொண்டு வரலாம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ. 11



## எதிர்க்கட்சி தலைவரின் உயிருக்கு அச்சுறுத்தல்!

### பாராளுமன்றில் எதிர்க்கட்சி சாடல்

கொழும்பு, பெப். 09

எதிர்க்கட்சித் தலைவரின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆர்ப்பாட்டத்தின்போது கண்ணீர் புகைக்குண்டுகள் வீசப்பட்டன என்று எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வை ஆரம்பித்து வைத்து ஜனாதிபதி ஆற்றிய உரை மீதான ஒத்திவைப்பு விவாதத் தில் நேற்று வியாழக்கிழமை கலந்து கொண்டு உரையாற்றிய போதே லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸமீது கண்ணீர் புகைக்குண்டு வீசுவதை தான் பார்த்ததாக கூறிய கிரியெல்ல, அதிர்ஷ்டவசமாக தோட்டா தனது காலில் விழுந்தது - என்றார். 11

### எரிபொருள் இறக்குமதி

## ஆஸி. நிறுவனத்தை நீக்குவதற்கு முடிவு!

கொழும்பு, பெப். 09

நாட்டில் எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகம், விற்பனையில் ஈடுபட அனுமதி பெற்ற அவுஸ்திரேலியாவை சேர்ந்த யுனைற்றட் பெற்றோலிய நிறுவனத்தை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலு சக்தி இராஜாங்க அமைச்சர் டீ. வி. சானக தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று வியாழக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், 11

### பயங்கரவாத சட்டம்:

## 30 வழக்குகள் தாக்கலாகின

கொழும்பு, பெப். 09

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்துக்கு இதுவரை 30 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மகிந்த 11

## தெற்காசியாவில் இலங்கையிலேயே அதிக மின்சாரக் கட்டணம் அறவீடு!

### வெரிட்டே றிசேர்ச் நிறுவன ஆய்வில் தகவல்

கொழும்பு, பெப். 09

தெற்காசியாவில் இலங்கையிலேயே அதிக மின்சார கட்டணம் அறவிடப்படுகிறது என்று வெரிட்டே றிசேர்ச் (Verité Research) நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

தெற்காசியாவில் உள்ள ஏனைய நாடுகளின் மின்சார கட்டணத்தை விட இலங்கையின் மின்சாரக் கட்டணம் 2.5 முதல் 3 மடங்கு அதிகம் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அடுத்த இடத்தில் பாகிஸ்தான் உள்ளது. ஆனால், அங்கு மின்சார கட்டணம் இலங்கையை விடவும் மிகக் குறைவாகும். இலங்கையில் 100 அலகுகள் மின்சாரத்தை பயன்படுத்தும் ஒரு வீடு செலுத்த வேண்டிய மின்சார கட்டணம் பாகிஸ்தானில் அதே எண்ணிக்கையிலான 11

### சரணடைந்த புலிகள்

## தகவல் வழங்க மறுத்த வழக்கு இராணுவம் ஆஜராக உத்தரவு!

கொழும்பு, பெப். 09

இறுதி யுத்த காலத்தில் சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல்களை வழங்க மறுத்தமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான பரிசீலனையில் முன்னிலையாக வேண்டுமென இராணுவத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான பல்வேறு தகவல்களை, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் பா. நிரோஸ் 2019 ஆம் ஆண்டு கோரியிருந்தார்.

எனினும், "இலங்கை இராணுவத்திடம் 11

## அரசமைப்பு மீறலுக்கு சபாநாயகரும் துணை!

### எதிர்க்கட்சி தலைவர் சாடல்

கொழும்பு, பெப். 09

உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களைப் புறக்கணித்தே நிகழ்நிலை காப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசமைப்பு மீறல் செயல்பாட்டுக்கு சபாநாயகர் துணை சென்றுள்ளார். சட்டத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன 11

## முதியோர், ஊனமுற்றோர் கொடுப்பனவு அதிகரிப்பு!

கொழும்பு, பெப். 09

முதியோர், ஊனமுற் றோர், சிறுநீரக பாதிப்புக்கு உள்ளானோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவு கடந்த ஜனவரி மாதம் நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, 5 ஆயிரம் ரூபாயாக இருந்த ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான 11

## காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்; இராணுவமே பதிலளிக்க வேண்டும்!

### நீதிபதி இளஞ்செழியன் உத்தரவு

வவுனியா, பெப். 09

இராணுவத்தின் பொறுப்பில் இருந்தவர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார். எனவே, இராணுவம் பதிலளிக்க வேண்டும் - அவர்களே பொறுப்பேற்க வேண்டும் - இவ்வாறு வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவரான கந்தசாமி இளரங்கன் என்பவரை தேடி அவரின் தாயார் தொடுத்த ஆட்கொணர்வு மனு மீதான விசாரணையில் உத்தரவிட்டுள்ளார் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன்.

மேலும், எதிர்வரும் ஜூன் 3ஆம் திகதி அல்லது அதற்கு முன்னரான ஒரு திகதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவராகக் கூறப்படும் கந்தசாமி இளரங்கனை உயிருடன் 11

## பலாலி விமான நிலையத்துக்கு காணி; எதிர்த்துப் போராட மக்கள் தீர்மானம்!

யாழ்ப்பாணம், பெப். 09

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்கு 500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்களை முன்னெடுக்க சிவில் அமைப்புகள் தயாராகியுள்ளன.

வலி. வடக்கு பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளில் 3 ஆயிரம் ஏக்கர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இந்தக் காணிகளை விடுவிக்குமாறு பல தரப்பினரிடம் கோரிக்கைகள் விடுத்தும் - போராட்டங்களை நடத்தியும் இன்னும் அவை விடுவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலைய விரிவாக்கத்துக்கென 500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க 11

# இப்படியும் நடக்கிறது

மறவன்புலவு க. சச்சிதானந்தன் பற்றி இந்தப் பத்தியில் பல தடவைகள் எழுதியிருக்கின்றோம். அவரது செயல்திறமை பற்றி அவரை அறிந்தவர்கள் நன்கு அறிவார்கள். ஈழம் சிவ சேனை அமைப்பின் தலைவரான அவரிடமிருந்து கிடைத்த ஓர் அறிக்கை எமது கவனத்தைப் பெற்றது.

தமிழ் அரசு கட்சிக்குள் பொதுச்செயலாளர் தெரிவில் ஏற்பட்ட குளறுபடிகள் - சச்சரவுகள் உலகம் அறிந்த ஒன்று. தமிழ் அரசின் பாரம்பரியத்தின்படி தலைமைப் பதவி யாழ்ப்பாணத்துக்கு எனில், பொதுச்சொயலாளர் பதவி கிழக்கு மாகாணத்துக்கு என்பது எழுதப்படாத விதியாக இருந்து வருகின்றது. ஆனால், கிழக்கு மாகாணம் என்றால் அது திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு என்று மூன்று மாவட்டங்களையும் சேர்த்தது தான். ஆனால், திருமலையைச் சேர்ந்த ஒருவருக்கு அதனைக் கொடுக்க முன்வந்தால் (அது எப்படி? எதற்காக? என்பது வேறு சங்கதி) மட்டக்ககளப்பிலிருந்து அது தமது மாவட்டத்துக்குத் தான் வேண்டும் என்று போர்க்கொடி தூக்குகின்றார்கள். தலைமைப்பதவி வடக்கு மாகாணத்துக்கு என்றால் அது யாழ்ப்பாண மாவட்டத்துக்கு என்பது எழுதப்படாத விதியாகிவிட்டது. அதேபோல கிழக்கு மாகாணம் என்றால் மட்டக்களப்பு என்று வியாக்கியானம் சொல்லுமளவிற்கு நிலைமை தலைகீழாக மாறியிருக்கின்றது.

அந்த நேரத்தில்தான் சிவ சேனை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று நம்மை சிந்திக்க வைத்திருக்கிறது.

அதனை அப்படியே கீழே தருகின்றோம்:

“..... யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் பலர் தங்களைத் தலைவர்கள் என்றும்

தாங்கள் எங்கு எதை நினைத்தாலும் செய்யலாம் என்றும் நினைக்கின்ற மேலாதிக்க உணர்வு கொண்டவர்கள்.

கூட்டமைப்பு, கூட்டணி என்றால் வலிகாமத்தாரும் வடமராட்சியாரும் கூடுகின்ற நிகழ்ச்சியாக இலங்கைத் தமிழர் நகை முரணுடன் பார்க்கிறார்கள்.

சிவ சேனையின் அணுகுமுறை முழுக்க வேறுபடும்.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் மதமாற்றக் கூட்டத்தை நிறுத்தியதை யாழ்ப்பாணத்தில் இருந்தே செய்தோம் - வழிகாட்டினோம். ஆனால், நிகழ்த்தியவர் அனைவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர்கூட அங்கு இல்லை.

திருகோணமலையில் மத மாற்றக் கூட்டத்தை வெற்றிகரமாகத் திருகோணமலையைச் சேர்ந்தவர்களே தடுத்தார்கள்.

மன்னாரில் நடக்கின்ற சிவ சேனை நிகழ்ச்சிகளை மன்னாரில் உள்ளவர்களே நடத்துகிறார்கள்.

வவுனியாவில் பசுக் கொலைக்கு எதிரான இரண்டு கிலோமீற்றர் நீண்ட ஊர்வலத்தை வவுனியாவினரே நடத்தினார்கள்.

கிளிநொச்சியில் முன்னெடுக்கின்ற மதமாற்றத் தடை நிகழ்ச்சிகள் அனைத்தையும் கிளிநொச்சி வாழ் சைவர்களே தீர்மானிக்கிறார்கள்.

கல்முனையில் மதமாற்றிய ஒருவரை நாடகற்றுகின்ற முயற்சியில் வெற்றி பெற்றவர் கல்முனையைச் சேர்ந்தவரே.

சிலாபத்தில் வெளிநாட்டு மத மாற்றி ஒருவரைத் திருப்பி அனுப்புகின்ற முயற்சியில் வெற்றி பெற்றவர் சிலாபத்தைச் சேர்ந்தவரே.

திருகோணமலையில், மன்னாரில், வவுனியாவில், கிளிநொச்சியில், அம்பாறையில், முல்லைத்தீவில், மலையகத்தில் வெற்றிகரமாகப் பல நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறோம் - சிவசேனை சார்பில் நடத்தி வருகிறோம்.

எந்தச் சிக்கல் எங்கு வந்தாலும் அந்தச் சிக்கலைத் தீர்ப்பவர்கள் அந்த ஊரின் - அந்த மண்ணின் - அந்தப் பிரதேசத்தின் அந்த வாழ்வியல் முறையை மாற்றுகின்ற நோக்கம் கொண்டவர்களாக இருப்பதைச் சிவசேனையினர் பார்த்துக் கொண்டோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியே யாழ்ப்பாண எதிர் உணர்வு அடி மனதில் கடுமை. எனவே எந்த இடத்தில் என்ன நிகழ்ச்சியைச் சிவசேனை நடத்தினாலும் அந்த ஊர் மக்களே முன்னெடுக்குமாறும் முன்னிற்குமாறும் பார்த்துக் கொள்கிறோம். அவர்கள் அழைத்து நாங்கள் சென்றாலும் பின் வரிசையில் இருந்து பார்த்துவிட்டு வருவோம். முன்வரிசைக்குப் போக மாட்டோம்.

சிவ சேனையின் எந்த ஒரு போராட்டத்திலும் முயற்சியிலும் பின்னடைவு இல்லாமல் முன்னேற்றங்கள் இருப்பதற்கு அந்த மண்ணின் - அந்த ஊரில் - அந்தப் பிரதேசத்தின் மக்களே முன்னெடுப்பது அடிப்படைக் காரணம்.

வலிகாமமும் வடமராட்சியும் இலங்கைத் தமிழரின் தலைமையகம் அல்ல.

வடமராட்சியாரும் வலிகாமத்தாரும் அவ்வாறு நினைப்பதால் தொடர்ந்து தோல்விகளைச் சந்தித்து வருகிறோம்.


யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள் தீவகத்தாரும் தென்மராட்சியாரும் பச்சிலைப்பள்ளியாரும் வலிகாமத்தாராலும் வடமராட்சியாராலும் தொடர்ச்சியாகப் புறந்தள்ளுவதை அரசியலில் - சமூகத்தில் பிற சமூகக் கூறுகளில் தாங்கிக் கொண்டே வந்திருக்கிறோம்.

யாழ்ப்பாண எதிர்ப்புக்கு உங்களை அறியாமலே வழிகோலுகிறீர்கள். பிரதேச வாதத்துக்குப் புத்துயிர் ஊட்டுகிறீர்கள்.’

இதுவே சிவசேனையின் அறிக்கை.

நமது அரசியல் தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் சிந்திக்கவேண்டிய விடயம் ஒன்றை அவர் சுட்டி நிற்கிறார். அரசியல் பதவியில் எவர் வந்தாலும் அவர் பிரதேசம் கடந்து பணியாற்றுவார் என்ற நம்பிக்கை நமக்கு ஏற்படவேண்டும். அதற்கு பிரதேசம் கடந்த- தமிழ் தேசியத் தலைவர் ஒருவர் தேவை.

**- ஊர்க்குருவி.**



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய அலங்கார உற்சவத்தின் தேர்த் திருவிழா நேற்று புதன்கிழமை காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படங்கள்: ஐ. சிவசாந்தன்)

# கெஹலிய காலத்தில் இறக்குமதியான மருந்தே அவருக்கு வழங்கப்படுகிறது

## சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர்

கொழும்பு, பெப். 09

கெஹலிய சுகாதார அமைச்சராக இருந்தபோது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட மருந்தே அவருக்கு வழங்கப்படுகின்றது என்று சிறைச்சாலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

தரமற்ற இம்யூனோ குளோபுலின் தடுப்பூசி இறக்குமதியில் முறைகேடுகள் இடம்பெற்றன என்ற குற்றச்சாட்டில் நீதிமன்ற உத்தரவின்கீழ் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

உடல்நலக்குறைவுக்கு உள்ளான அவர் சிங்கப்பூர் மருந்து தரவேண்டும் என்று கோரினார் என்று அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. இந்த நிலையிலேயே சிறைச்சாலைகள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார். (ஐ)

# வீதியில் நெல் உலரவிட்டவர்களை டிப்பர் மோதியதில் 4 பேர் படுகாயம்!

யாழ்ப்பாணம், பெப். 09

நெல் உலர விட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது டிப்பர் மோதியதில் நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் கிளிநொச்சி - பூநகரி - சாமிபுலம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பரந்தன் பூநகரி வீதியில் சாமிப்புலம் பாடசாலைக்கு முன்பாக இரவுநேரம் நெல்லை வீதியில் உலர விட்டு கொண்டிருந்தவர்களை பூநகரி பக்கமாக இருந்து வேகமாக வந்த டிப்பர் மோதியது. இதிலேயே நால்வரும் படுகாயமடைந்தனர்.

இதில், உதயகுமார் குயிலன் (வயது 23) , சபாரத்தினம் தூயவன் (வயது 25), கணேஸ் (வயது 23), கபிசன் (வயது 8) ஆகியோரே படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், படுகாயமடைந்தவர்கள் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களை மோதிய டிப்பர் நிற்காமல் தப்பிச் சென்றுள்ளது என்று கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, தற்போது காலபோக நெற்செய்கை கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றது. நெல் உலர விடும் தளங்கள் மிகக் குறைவாக காணப்படுவதன் காரணமாக பெருமளவு விவசாயிகள் வீதியிலேயே நெல்லை உலர விடுகின்றனர். இதனால், அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, இது விடயத்தில் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறு கமக்கார அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளன. (ஐ)

## அரசுக்கு எதிர்ப்பு தெரிவித்து

# அரச பங்குடைமை திட்டத்திலிருந்து சிவில் சமூக அமைப்புகள் விலகல்!

கொழும்பு, பெப். 09

இலங்கையின் திறந்த அரசாங்க பங்குடைமையின் நிகழ்ச்சி திட்டத்துடன் தொடர்புடைய மூன்றாவது தேசிய செயல் திட்டத்தின் தயாரிப்பதில் பங்களிக்கும் சிவில் சமூக அமைப்புகள் சிவில் கூட்டு முயற்சிகளிலிருந்து விலகுவதாக ஒன்றிணைந்து தீர்மானித்துள்ளன.

இது அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள், குறிப்பாக நிகழ்நிலை காப்புச் சட்டத்தை நிறைவேற்றுதல், பரவலான எதிர்ப்பையும் மீறி பயங்கரவாத எதிர்ப்பு மசோதாவை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகள் ஆகியவற்றுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில், சிவில் சமூக வெளியை அடக்குவதற்கும் பொது மக்களின் அடிப்படை சுதந்திர மீறலுக்கும் எதிராக இந்தக் கொள்கை ரீதியான நிலைப்பாட்டுக்கு எம்மை நிர்ப்பந்தித்துள்ளன.

இந்த முடிவானது குழுவாக தீர்க்கமான முறையில் பரிசீலிக்கப்பட்ட பின்னர், இலங்கையின் திறந்த அரசாங்க பங்குடைமையின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரணாக நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆபத்தான முன்னெடுப்புகளுக்குப் பதிலளிக்கும் விதமாக எடுக்கப்பட்டது.

இலங்கையின் திறந்த அரசாங்க பங்குடைமையின் சிவில் சமூக அமைப்புகளின் இணைப்பாளர்கள் என்ற வகையில், ட்ரான்ஸ்பேரன்சி இன்ரர்நஷனல் சிறீ லங்கா மற்றும் சர்வோதய சிரமதான இயக்கம் இந்த கூட்டு முடிவை உத்தியோகபூர்வமாக ஜனாதிபதிக்கு நேற்று கடிதம் மூலம் அறிவித்தன. (ஐ)

# ‘செம்பாத்தாள்’ கூத்துருவ நாடகம்

யாழ்ப்பாணம், பெப். 09

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் ‘செம்பாத்தாள்’ கூத்துருவ நாடகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையற்றப்படவுள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் 1679 இல் வன்னிப் பிரதேசத்தில் தென்னமரவாடி பிராந்தியத்திற்கு தலைமை வகித்த மரிய செம்பாத்தாவின் வரலாற்று அடிப்படைகளில் இருந்து கற்பனையுடன் உருவாக்கப்பட்ட படைப்பாக ‘செம்பாத்தாள்’ கூத்துருவ நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
09.02.2024 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், தை 26

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழர்களுடன் இணைந்து என்றால்...?

க. வி. விக்னேஸ்வரன் அவ்வப்போது நானும் இருக்கிறேன் என்பதை காண்பிப்பதற்காகவா கருத்துகளை கூறிக் கொண்டிருக்கின்றார்? முன்னர் பொது வேட்பாளர் பற்றிப் பேசினார் - அனைவரும் அழைத்தால் தான் வேட்பாளராக நிற்பதற்குத் தயாராக இருக்கிறார் என்று அறிவித்தார் - பின்னர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொருத்தமானவர் என்றார் - இப்போது ரணில் விக்கிரமசிங்கதான் பொருத்தமானவர் என்கிறார். அரசியலில் இயங்க முடியாத நிலையிலா விக்னேஸ்வரன் இருக்கின்றார்?

நிலைப்பாடுகளை உறுதியாக மேற்கொள்ள வேண்டும் - இல்லாவிட்டால் அமைதியாக இருக்க வேண்டும். ரணிலுக்கு அவசரப்பட்டு நற்சான்றிதழ் வழங்க வேண்டிய எந்தவொரு தேவையுமில்லை. அதிலும் தமிழ்த் தேசிய அரசியல் பரப்பை பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொள்ளும் விக்னேஸ்வரனுக்கு இல்லை. ரணில் தமிழ் மக்களுடன் இணைந்து பணியாற்றுவாரா அல்லது இல்லையா - அத்துடன், அவர் தமிழ் மக்களின் பிரச்னைகளை எந்தளவு தீர்ப்பார் என்பதெல்லாம் அவரின் செயல்பாடுகளின் மூலம்தான் நிரூபிக்கப்பட வேண்டும். தென்னிலங்கை அரசியல் வாதிகளின் வெறும் வாய் வார்த்தைகளை நம்பி இனியும் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் செயல்படுவார்களாயின், அவர்கள் வெறும் சுயலாபத்துக்காகவே அரசியலில் இருக்கின்றனர் என்பதுதான் பொருளாகும்.

ரணில், வழங்கிய வாக்குறுதிகள் எவற்றையும் இதுவரையில் நிறைவேற்றவில்லை. ஆகக் குறைந்தது விக்னேஸ்வரனுக்கு வழங்கிய வாக்குறுதிகளைக்கூட நிறைவேற்றவில்லை. இப்போதும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு எவ்வித தடையும் இல்லை. அதேபோன்று, அரசமைப்பில் இருக்கின்ற விடயங்களை அமுல்படுத்துவதிலும் எவ்வித தடைகளும் இல்லை. ஆனாலும் ரணில் விக்கிரமசிங்க அவற்றில் எவ்வித நாட்டமும் கொள்ளவில்லை. ரணில் ஒப்பீட்டு அடிப்படையில் ஏனைய தென்னிலங்கை அரசியல்வாதிகளை விடவும் பிரச்னைகளை புரிந்து கொண்ட ஒருவர்தான் ஆனால், அது மட்டும் அவரை ஏற்றுக் கொள்வதற்கு போதுமானதல்ல.

ரணில் ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. அவரின் மாமனார் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் வார்த்தையில் கூறுவதானால், ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர, அனைத்தையும் செய்யக் கூடிய அதிகாரங்கள் அவரிடமுண்டு - அவற்றைக் கொண்டு பல விடயங்களை அவர் செய்திருக்க முடியும் - ஆனால், அவர் எதனையும் செய்ய முயற்சிக்கவில்லை - வெறுமனே, தமிழ் மக்கள் தன்னை ஆதரிக்க வேண்டும் என்றவாறான கருத்துக்களை மட்டும் கூறிக்கொண்டிருக்கின்றார். கட்சிகளின் தலைவர்களை தனியாக கையாள முடியுமென்று நம்புகின்றார். இது அடிப்படையிலேயே தவறானது. ரணில் அவரின் செயல் மூலம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையளிக்க வேண்டும். விக்னேஸ்வரன் தென்னிலங்கையில் உள்ளவர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கும் வேலையை விட்டுவிட்டு தனக்கு வாக்களித்த மக்களின் சார்பில் என்ன செய்ய முடியுமென்றுதான் சிந்திக்க வேண்டும்.

# இராணுவ பிடியிலுள்ள காணிகளை உரியவர்களிடம் வழங்குங்கள்!

## சார்ள்ஸ் எம். பி. சபையில் வலியுறுத்து

*கொழும்பு, பெப். 09*

இராணுவ மயமாக்கப்பட்ட தனியார் நிலங்களை மீண்டும் உரியவர்களுக்கு விடுவிக்க வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரையானது நாட்டின் பொருளாதாரத்தை மையப்படுத்தியே அமைந்திருந்தது. தமிழர்களுக்கு எதிராக இடம்பெறும் அநீதிகள் பற்றி முன்வைக்காதது வருத்தமளிக்கிறது என்றும் அவர் கூறினார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேலும், தமிழர்களுக்கு இன ரீதியாக பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது. தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றது.

மத கலாசாரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றது இது தொடர்பாக ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிடாதது வருத்தமளிக்கின்றது.

20 இலட்சம் மக்களுக்கு காணி உறுதி பாத்திரங்கள் வழங்கப்பட்டன என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். இங்கே காணி பத்திரம் வழங்கப்படும் நேரத்தில் மன்னார் மாவட்டத்தில் சில மக்கள் காணி அபகரிப்புக்கு உட்பட்டுக்கொண்டிருந்தமை முக்கியமான விடயம்.

மேலும், யுத்தம் ஏற்பட்ட போது பலர் அரசியல் கைதிகளாக சிறையிலடைக்கப்பட்டனர். இருந்தும் பலர் ஜனாதிபதியால் விடுவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இன்னும் சிறையிலிருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டும். இராணுவ மயமாக்கப்பட்ட தனியார் நிலங்களை மீண்டும் உரியவர்களுக்கு விடுவிக்க வேண்டும் - என்றார்.

# போதை மாத்திரைகளுடன் ஆணும் பெண்ணும் கைது!

*மன்னார், பெப். 09*

விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறப்படும் 1,200 போதை மாத்திரைகளுடன் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மன்னார், நானாட்டான் பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய பெண்ணும் 45 வயதுடைய ஆணுமாவர்.

சந்தேகநபர்கள் மன்னார் , சிலாபத்துறை, நானாட்டான் பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் குற்றப் புலனாய்வு பிரிவினர் மற்றும் கடற்படை அதிகாரிகளால் சிலாபத்துறை , நானாட்டான் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 1,200 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளுடன் சிலாபத்துறை பொலிஸ் நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ)

# நூல் வெளியீடு

*கிளிநொச்சி, பெப். 09*

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் எழுதிய 34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு நூல் வெளியீடு நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி - கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஆனையிறவு பெருந்தளத்தை போராளிகள் வெற்றி கொண்ட வரலாற்றை மையமாகக் கொண்டமைந்த நாவலே ‘34 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு’ என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மக்கள் அபிலாசை நிறைவேற ஜனாதிபதி ரணிலே காரணம்!

## அமைச்சர் நிமால் புகழாரம்


*கொழும்பு, பெப். 09*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தெளிவான பொருளாதார வேலைத் திட்டத்தின் கீழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேறும் வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன எனத் துறைமுகங்கள் விமான சேவைகள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடந்த ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு சர்வதேசமும் தமது வாழ்த்துகளைத் தெரிவித்து வரும் நிலையில் சர்வதேச ரீதியில் எமது நாடு மீதான நம்பிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. சர்வதேசத்துடன் இணைந்து செயல்படாமல் எம் போன்ற நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவது அசௌகரியமான விடயமாகும் - என்றும் கூறினார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். புத்துணர்ச்சி பெருகும்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். நாவடக்கம் தேவைப்படும்.

**மிதுனம்**
உங்களின் அறிவை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தை பெருக்குவீர்கள். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**சிம்மம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள். சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புது வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**துலாம்**
தன்னிச்சையாக ஒருசில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். புதுவாகனம் வாங்குவீர்கள். வியாபா ரம் சூடு பிடிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரி பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும் மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் வேண்டாம். அலைக்கழிக்கப்படுவீர்கள். கவனம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
ஒரு விஷயத்தை நினைத்து அதிக அளவில் குழப்பம் அடைவீர்கள். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். போராடி வெல்லும் நாள்.

**கும்பம்**
உங்களுக்கு எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். சிறப்பான நாள்.

**மீனம்**
உங்களுக்கு எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். சிறப்பான நாள்.

**ஆயுத போராட்ட முயற்சி**

# நாம் தமிழர் கட்சியினரிடம் 3 மணி நேரம் விசாரணை

சென்னை, பெப். 09

ஆயுதப் போராட்டத்துக்கு முயற்சித்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில், சென்னையில் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளிடம் தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ.) அதிகாரிகள் புதன்கிழமை 9 மணி நேரம் விசாரணை செய்தனர்.

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே 2022 மே 19-ஆம் திகதி இரண்டு பேரை இரு துப்பாக்கிகளுடன் பொலிஸார் கைது செய்தனர். விசாரணையில், யூ-டியூப் பார்த்து துப்பாக்கி தயாரித்தது தெரியவந்தது.

இதை தொடர்ந்து, தமிழகத்தில் நாம் தமிழர் கட்சியினருக்குச் சொந்தமான 6 இடங்களில் என். ஐ. ஏ. அதிகாரிகள் கடந்த 2ஆம் திகதி சோதனை நடத்தினர்.

இதை தொடர்ந்து நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளிடம் விசாரணைக்கு ஆஜராகும்படி என். ஐ. ஏ. அதிகாரிகள் அழைப்பாணை வழங்கினர். இதை ஏற்று நாம் தமிழர் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளரான பிரபல யூ-டியூபர் சாட்டை துரை முருகன் உள்ளிட்ட மூன்று பேரிடம் என். ஐ. ஏ அதிகாரிகள் தனித்தனியாக சுமார் 9 மணி நேரம் விசாரணை நடத்தினர்.

இந்த வழக்கில் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த மேலும் சிலரிடம் என் ஐ. ஏ. அதிகாரிகள் விசாரிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

(ஐ)

# புதுச்சேரியில் பா. ஜ. கவே தேர்தலில் போட்டியிடும்!

**புதுச்சேரி முதல்வர் அறிவிப்பு**

புதுச்சேரி, பெப். 09

கூட்டணி கட்சியான பா. ஜ. க. வேட்பாளர் வெற்றி பெற செய்ய வேண்டியது மிக அவசியம் மற்றும் அது நம் கடமை என்று கூறியுள்ளார் புதுச்சேரி முதல்வர்.

புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் - பா. ஜ. க. கூட்டணி ஆட்சி நடக்கிறது. கடந்த வாரம் புதுச்சேரி வந்த பா. ஜ. க. மாநில பொறுப்பாளர் நிர்மல்குமார் சுரானா, பா. ஜ. க. அமைச்சர்களுடன் முதல்வர் ரங்கசாமியை அவரது இல்லத்தில் சந்தித்து பேசினார்.

அப்போது, புதுச்சேரி தொகுதியை பா. ஜ. கவுக்கு வழங்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அதற்கு, ரங்கசாமியும் ஒப்புதல் அளித்தார்.

ஆனால் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு என்.ஆர். காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் என். ஆர். காங்கிரஸ் வேட்பாளர் போட்டியிட வேண்டும் என கட்சி நிர்வாகிகள் வலியுறுத்தினர். இதுகுறித்த முடிவை, கட்சி ஆண்டு விழாவில் அறிவிப்பதாக முதல்வர் ரங்கசாமி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடந்த என். ஆர்.காங்கிரஸ் கட்சியின் ஆண்டு விழாவில், முதல்வர் ரங்கசாமி பேசிய போது,

இந்த தேர்தலில் கூட்டணி கட்சியான பா. ஜ. க. வேட்பாளர் வெற்றி பெற செய்ய வேண்டியது மிக அவசியம் மற்றும் அது நம் கடமை. கூட்டணி வேட்பாளர் வெற்றிக்கு நாம் உழைக்க வேண்டும். கட்சியை பலப்படுத்த ஐந்து பேர் கொண்ட உயர்மட்ட குழுவும், 10 பேர் கொண்ட ஆலோசனை குழுவும் அமைக்கப்படும் என, தெரிவித்தார்.

முதல்வரின் பேச்சில் இருந்து, புதுச்சேரி தொகுதியில் பா.ஜ., வேட்பாளர் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

(ஐ)

# விஜய் கட்சிக்கு புதிய சிக்கல்!

சென்னை, பெப். 09

நடிகர் விஜய் கட்சியின் பெயருக்கு தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகனால் புதிய சிக்கல் எழுந்துள்ளது.

நடிகர் விஜய் தொடங்கியுள்ள கட்சியின் பெயர் தமிழக வெற்றி கழகம். சமீபத்தில் தேர்தல் ஆணையத்தில் கட்சியின் பெயரைப் பதிவு செய்தார்.

இதனை ஆங்கிலத்தில் சுருக்கமாக ரி. வி. கே. (வுஏமு) என்று குறிப்பிட்டு வந்தனர். இதனிடையே, விஜய் கட்சிக்கு ஆங்கிலத்தில் சுருக்கமாக ரி. வி. கே. என்று வழங்கக் கூடாது என தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் தேர்தல் ஆணையத்தில் முறையிடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஏற்கனவே தமிழகத்தில் தமிழக வாழ்வுரிமை கட்சி 2012 தேர்தலில் போட்டியிட்டுள்ளது. தமிழக வாழ்வுரிமை கட்சியும், ஆங்கிலத்தில் ரி. வி. கே. என்று வருவதால், ரி. வி. கே. என்பதை விஜய்க்கு வழங்க கூடாது என முறையிடுவோம் என வேல்முருகன் தெரிவித்துள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ)

# அ. தி. மு. க. தலைமையில் விரைவில் சிறந்த கூட்டணி அமையப்பெறும்

**எடப்பாடி பழனிச்சாமி**

நாமக்கல், பெப். 09

"சாலையில் சென்றுகொண்டிருக்கும் ஒரு காரில் இருந்து ஒவ்வொரு ரயராக கழன்று செல்வது போல ஒவ்வொருவராக இந்தியா கூட்டணியிருந்து பிரிந்து செல்கின்றனர். பொறுத்திருந்து பாருங்கள். விரைவில் அ. தி. மு. க. தலைமையில் சிறப்பான கூட்டணி அமையும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ. தி. மு. க. தொழில்நுட்ப அணியின் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல்லில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய அதிமுக பொதுச் செயலாளர் இ. பி. எஸ். கூறியவை வருமாறு,

"நம்மை பொறுத்தவரை மக்களை நம்பி மட்டுமே நாம் கட்சி நடத்தி வருகிறோம். பணத்தை கொடுத்து வாக்குகளை பெற்றுவிடலாம் என்று சிலர் பகல் கனவு காண்கிறார்கள். அ. தி. மு. க. மட்டுமே ஜனநாயக கட்சி.

தி. மு. க. ஒரு வாரிசு அரசியல் கட்சி. கருணாநிதி தி. மு. க. தலைவராக இருந்தார். அவரது மறைவுக்குப் பிறகு ஸ்டாலின் அக்கட்சியின் தலைவராக இருக்கிறார். ஏதோ தில்லுமுல்லு செய்து கொள்ளைப் புறம் வழியாக ஆட்சிக்கு வந்து முதலமைச்சராக இருக்கிறார். அதன் பிறகு தன்னுடைய மகன் உதயநிதியை விளையாட்டுத் துறை அமைச்சராக்கி அவரை முன்னிலைப்படுத்தி வருகின்றார். அந்த கட்சிக்காக பல ஆண்டுகாலமாக உழைத்தவர்கள், பல ஆண்டுகளாக அமைச்சர்களாக இருந்தவர்களை எல்லாம் பின்னுக்கு தள்ளி, ஸ்டாலின் குடும்பத்தில் பிறந்த ஒரே காரணத்துக்காக உதயநிதியை முன்னிறுத்தி செயல்படும் கட்சி தி. மு. க.

நம்முடைய கட்சி அப்படியானது அல்ல. மேடைக்கு கீழ அமர்ந்திருப்பவர்கள் மேடையில் வந்து அமரும் சூழல் உள்ள கட்சி அ. தி. மு. க. நானும் அங்கே அமர்ந்து, மேடைப் பேச்சைக் கேட்டு படிப்படியாக மேலே வந்து இங்கே அமர்ந்திருக்கிறேன். அதற்கு நானே சாட்சி.

இன்னும் சில மாதங்களில் பாராளுமன்ற தேர்தல் வர இருக்கிறது. தேசிய கட்சிகளோடு கூட்டணி வைத்தால் நம் மாநிலத்தின் பிரச்னைகளை அவர்கள் காது கொடுத்து கேட்பதில்லை. அதனால் பாதிக்கப்படுவது நாம்தான். தமிழ்நாட்டு மக்களுடைய உரிமைகளை பாதுகாக்க, அவர்களுக்கு தேவையான நிதியை பெற்றுவர, புயல், வெள்ளத்தின்போது தமிழ்நாட்டு மக்களுடைய பிரச்னைகளை யார் நிவர்த்தி செய்கிறாரோ அவர்களுக்கே நாம் ஆதரவு கொடுப்போம். இந்தியா கூட்டணி என்று ஒரு கூட்டணி அமைத்து தி. மு. க. ஆட்சியை பிடிக்க விரும்பியது. ஆனால், சாலையில் சென்றுகொண்டிருக்கும் ஒரு காரில் இருந்து ஒவ்வொரு ரயராக கழன்று செல்வது போல ஒவ்வொருவராக கூட்டணியிருந்து பிரிந்து செல்கின்றனர். பொறுத்திருந்து பாருங்கள். விரைவில் அ. தி. மு. க. தலைமையில் சிறப்பான கூட்டணி அமையும்" என்றார்.

# இணையவழி காப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்

## நீதியமைச்சர் சபையில் உறுதி

கொழும்பு, பெப். 09

**அண்மையில் அமுல்படுத்தப்பட்ட இணையவழி பாதுகாப்புச் சட்டத்தில் சில குறைபாடுகள் இருப்பதை அரசாங்கம் அவதானித்துள்ளதுடன், சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நேற்று தெரிவித்துள்ளார்.**



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஆகியோரின் கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, இந்தச் சட்டத்தை பிழையானது என அழைப்பது அர்த்தமற்றது என்றும், சட்டத்தில் திருத்தங்களை முன்வைக்குமாறு எதிர்க்கட்சிகளிடம் கோரினார்.

"இந்தச் சட்டத்தில் குறைபாடுகள் உள்ளன. சில குறைபாடுகளை நாங்கள் அவதானித்துள்ளோம். திருத்தங்களைச் செய்வதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். தேவையான திருத்தங்களை நீங்கள் முன்மொழியுங்கள். அவற்றை நாங்கள் விவாதிப்போம். அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உள்ளது. பாராளுமன்றத்தில் விவாதித்து தேவையான திருத்தங்கள் இல்லாமல் செய்ய வேண்டும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இணையவழி பாதுகாப்புச் சட்டம் பிழையானது என அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதுடன், குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளமை பாராட்டுக்குரியது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சட்டம் தொடர்பான விவாதங்களுக்கு தமக்கு ஆட்சேபனை இல்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். (அ)

# தரிசு நிலத்தில் அறுவடை!

யாழ்ப்பாணம், பெப். 09

சுழிபுரத்தில் நெல் வயலாக மாற்றப்பட்ட தரிசு நில காணியில் பொதுமக்களால் நேற்று அறுவடை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


கடந்த 2012 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்ட திருவடிநிலை மீள் குடியேற்ற பகுதியில் உள்ள குகன் குல சங்கத்தினருக்கு உரித்தான காணியில் 60 ஏக்கர் தரிசு நிலக் காணி சுழிபுரம் மேற்கு வாழ் பொதுமக்கள், புலம்பெயர்தேசத்தவர்கள், கலைமகள் விளையாட்டு கழகத்தினரால் பசுமை புரட்சி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த பகுதியானது நெல் வயலாக மாற்றப்பட்ட நிலையில் நேற்று அறுவடை முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் புலம்பெயர் தேச உறவுகள் சார்பில் முத்தையா ஞானவேல், வனிதா ரவீந்திரன், பசுமை புரட்சி திட்ட குழுவினர்களான நாராயணன் சபாரத்தினம், சைலசுதா, கனக சபை ரவீந்திரன்,சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டு கழகத்தினர்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)



# கிளிநொச்சி தும்பு ஆலையில் தீ!



கிளிநொச்சி, பெப். 09

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோணாவில் பகுதியில் மின்னொழுக்கு காரணமாக தும்புத் தொழிற்சாலை எரிந்து சாம்பலாகியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் 35 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியான நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீ பரவியமையால் தும்பு மற்றும் மின் உபகரணங்கள் அனைத்தும் எரிந்து சாம்பராகியுள்ளன.

கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்பு வாகனம் பழுதடைந்த நிலையில் இருந்தமையால் தண்ணீர் பவுசர் மற்றும் அயலவர்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இருப்பினும் தமது வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் நிர்க்கதியாக நிற்பதாக உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதியின் கீழ் வந்தது சுற்றாடல்துறை அமைச்சு!

கொழும்பு, பெப். 09

சுற்றாடல்துறை அமைச்சை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கொண்டுவரப்பட்டமைக்கான விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசிகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் சுற்றாடல் அமைச்சராகச் செயற்பட்ட கெஹலிய ரம்புக்வெல கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அவர் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இதனையடுத்தே சுற்றாடல் அமைச்சு ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் எம்.எஸ்.பி ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

பிரதமர் தினேஸ் குணவர்த்தனவுடன் கலந்துரையாடப்பட்டதன் பின்னர், இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருள் இல்லாமையால் தன்னை கத்தியால் குத்திக் காயம் ஏற்படுத்திய நபர்!

கொழும்பு, பெப். 09

குருநாகல் பஸ் நிலையத்திற்கு அருகில் தன்னைத்தானே கத்தியால் குத்திக் காயப்படுத்திய ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு காயமடைந்தவர் குருநாகல் பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

இவர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும் அதனை உட்கொள்வதற்காக தன்வசம் போதைப்பொருள் இல்லாத காரணத்தினால் கழுத்து மற்றும் மார்பு பகுதிகளை கத்தியால் குத்தி தன்னைத் தானே காயப்படுத்தியுள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபருக்கு எதிராக பல்வேறு குற்றங்கள் தொடர்பில் 13 குற்றச்சாட்டுகள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 13ஆவது திருத்தத்தை எதிர்த்ததற்கு ஜே.வி.பி. மன்னிப்பு கோர வேண்டும்!

கொழும்பு, பெப். 09

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அன்று எதிர்த்ததற்காக ஜே.வி.பியினர் இன்று மன்னிப்பு கோர வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய பயணம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

"ஜே.வி.பியினர் ஜனநாயக வழியில் பயணிப்பது மகிழ்ச்சியளிக்கின்றது. ஆனால் அவர்கள் கார்த்திகை வீரர்கள் தினத்தை அனுஷ்டிப்பதை அனுமதிக்க முடியாது. அத்துடன், 70 காலப்பகுதியில் உயிரிழந்தவர்களுக்காக அவர்கள் மேயில் நினைவேந்தல் நடத்துகின்றனர். இதையும் ஏற்கமுடியாது.

இன்று ஜே.வி.பியினர் இந்தியா சென்றுள்ளனர், நல்லவிடயம். ஆனால் அன்று இந்தியாவில் இருந்து மருந்து, பருப்பு கொண்டுவந்தவர் களையெல்லாம் ஜே.வி.பியினர் கொலை செய்தனர். இலங்கை, இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்தனர். மாகாணசபை முறைமைக்கு போர்க்கொடி தூக்கினர். இலங்கை - இந்திய ஒப்பந்தம்தான் இந்தியாவின் அடிப்படை காரணி. ஆக தற்போதைய சந்திப்பில் இது பற்றி பேசப்படாமல் இருக்குமா என்ன?

எனவே, இந்திய எதிர்ப்பு கொள்கை உட்பட தாம் அன்று செய்தது தவறு என்பதை ஏற்று அது தொடர்பில் ஜே.வி.பியினர் தெளிவான அறிவிப்பொன்றை வெளியிடவேண்டும். தன்னால் வெள்ளை இனத்தவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக உண்மையை கண்டறியும் ஆணைக்குழு முன்னிலையில் நெல்சன் மண்டேலா மன்னிப்பு கோரினார். அதுபோல ஜே.வி.பியினரும் மன்னிப்பு கோர வேண்டும்." - என்றார். (அ)

# உரப் பிரச்னைக்கு தீர்வு?

கொழும்பு, பெப். 09

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை பாதுகாக்கும் வகையில், சீனாவின் தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக 2022ஆம் ஆண்டு, இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட நச்சுத்தன்மை வாய்ந்த பக்டீரியா உர பிரச்னை தொடர்பான விவகாரத்தை கலந்துரையாடல் மூலம் தீர்ப்பதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

குறித்த உரக்கப்பல் திருப்பி அனுப்பப்பட்டமையினால், அந்த நிறுவனத்தின் நாமத்திற்கு ஏற்பட்ட அவப்பெயர் காரணமாக, 6.9 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை இழப்பீடாக செலுத்த வேண்டியிருந்தது.




இந்தநிலையில், எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரையில், நாட்டில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37ஆவது ஆசிய - பசுபிக் வலைய சம்மேளனம் இடம்பெறவுள்ளது.

இதன்போது, பங்கேற்கவுள்ள சீன விவசாய அமைச்சர் உள்ளிட்ட தரப்பினருடன் குறித்த விடயம் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஆட்சிமாற்றத்தின் மூலமே பிரச்னைகளுக்குத் தீர்வு!

## லக்ஷ்மன் கிரியெல்ல கூறுகிறார்



கொழும்பு, பெப். 09

**ஆட்சி மாற்றமொன்றின் ஊடாகத் தான் பொருளாதாரப் பிரச்சினைக்கும் அரசியல் பிரச்சினைக்கும் தீர்வினைக் காண முடியும் என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் தேர்தல் தொடர்பாக ஒரு வசனம் ஏதும் உள்ளதா? எம்முடன் இருந்த போது இருந்த ரணில் விக்கிரம சிங்க அல்ல தற்போது ஜனாதிபதியாக இருப்பது.

அல்லாவிட்டால், அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்குமா?

ஜனாதிபதித் தேர்தல் உடனடியாக நடைபெற வேண்டும். இதனை நடத்த ஒக்ரோபர்வரை காத்திருக்க வேண்டிய தேவைக் கிடையாது.

மக்கள் ஆட்சி மாற்றமொன்றை விரும்புகிறார்கள். எனவே, அரசாங்கம் இதற்கு செவிசாய்க்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்த, எம்மால் முடியுமான அனைத்து ஒத்துழைப்புக்களையும் நாம் செய்ய தயாராகவே உள்ளோம்.

ஆட்சி மாற்றமொன்றின் ஊடாகத் தான் பொருளாதாரப் பிரச்னைக்கும் அரசியல் பிரச்னைக்கும் தீர்வினைக் காண முடியும்-என்றார். (அ)

## இறங்குதுறைப் பிரச்னைக்கு தீர்வு கோரி சாவற்கட்டு மீனவர் ஆளுநருடன் சந்திப்பு!

யாழ்ப்பாணம், பெப். 09

தமது இறங்குதுறைப் பிரச்னைக்கு தீர்வைப் பெற்று தருமாறு கோரி யாழ்.சாவல்கட்டு மீனவர்கள் நேற்று வடக்கு மாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு இடம் பெற்றது.

சந்திப்பின் போது கடற்றொழில் அமைச்சரிடம் கலந்துரையாடி சரியான தீர்வை பெற்றுத் தருவதாக ஆளுநர் தமக்கு உறுதியளித்துள்ளதாக மீனவர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தமது இறங்குதுறைப் பிரச்சனைக்குத் தீர்வு கோரி சாவல்கட்டு மீனவர்கள் கடந்த 06 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## இணையவழி பாதுகாப்பு சட்டம் குறித்து பிரித்தானியா கவனம்!

கொழும்பு, பெப். 09

இணைய வழி பாதுகாப்பு சட்டம் தொடர்பில், சர்வதேச இணைய வழங்குநர்கள் மற்றும் பல்வேறு அக்கறையுள்ள தரப்பினரால் அதிருப்தி வெளியிடப்பட்ட நிலையில், பிரித்தானியாவும் தமது கவனத்தை செலுத்தியுள்ளது.

பாராளுமன்றில் கடந்த ஜனவரி மாதம் 24ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட இணைய வழி பாதுகாப்புச் சட்டத்தை உன்னிப்பாக கண்காணிப்பதாக பிரித்தானியா குறிப்பிட்டுள்ளது.

இந்த சட்டம் கருத்துச் சுதந்திரம் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து ஐக்கிய இராச்சியம் கரிசனை செலுத்தியுள்ளது. (அ)

## 4 கோடி ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்கள் அழிப்பு!



வவுனியா, பெப். 09

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படவிருந்த சுமார் 4 கோடி ரூபாய் பெறுமதியான உணவுப் பொருட்களும், கிருமிநாசினிகளும் நேற்று முன்தினம் வவுனியா, பம்பைமடுப் பகுதியில் நீதிபதி முன்னிலையில் அழிக்கப்பட்டன.

அரிசி, மஞ்சள் கொத்தமல்லி நிலக்கடலை, உட்பட 7000 கிலோகிராம் உணவுப்பொருட்களும், கிருமிநாசினிகளுமே இவ்வாறு மேலதிக நீதவான் ஜெ. சுபாஜினி மற்றும் சிங்கள பிரதேச சபை செயலாளர் விமலவேணி நிசங்க,சுகாதார பரிசோதகர்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டுள்ளன.

குறித்த பொருட்கள் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச எல்லைப் பகுதியில் வைத்து சுகாதார பரிசோதகர்களால் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஆனையிறவு, மன்னார் உப்பளங்களால் அரசுக்கு இம்முறை அதிகளவு இலாபம்

கிளிநொச்சி, பெப். 09

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆனையிறவு மற்றும் மன்னார் உப்பளங்கள் மூலம் இலாபமாக பெற்ற சுமார் 100 மில்லியன் ரூபா நிதியினை திறைசேரிக்கு வழங்கியுள்ளதாக ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொஸ்பேட் நிறுவனம் சுமார் 24 மில்லியன் மதிப்பிலான கனிம வளங்களைக் கொண்டுள்ளது.

ஆனால் அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடுத்துள்ள வழக்குகளின் காரணமாக அதிலிருந்து வருமானம் ஈட்ட முடியாத நிலை உள்ளது.

இதுபோன்ற பிரச்னைகள் இருந்தாலும், குறிப்பிட்ட அளவு பொஸ்பேட்டை விற்பனை செய்ய முடிந்தது.

அதன் மூலம் அனைத்துக் கடன்களையும் செலுத்தி சம்பளமும் கொடுத்து திறைசேரிக்கும் 350 மில்லியன் ரூபாவை வழங்க முடிந்துள்ளது.

அத்துடன் ஆனையிறவு மற்றும் மன்னார் உப்பளங்கள் மூலம் இலாபம் ஈட்டி 100 மில்லியன் ரூபாவை திறைசேரிக்கு வழங்கினோம்.

நாட்டில் உள்ள வளங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அதை செயல்படுத்துவதில் பல்வேறு தடைகள் எழுகின்றன.

உதாரணமாக, பொஸ்பேட் ஏற்றுமதிக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த பிரச்சினைகளையும் தடைகளையும் நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

பிரச்சினைகள் எழுகிறது என்பதற்காக நாட்டின் வளங்களைப் பயன்படுத்திக் கொள்வதை நிறுத்தக் கூடாது.

நாடு பொருளாதார வீழ்ச்சி அடைந்திருக்கும் வேளையில் அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளாததை நான் பாரிய குற்றமாகப் பார்க்கிறேன்.



சிமெந்துக் கூட்டுத்தாபனம் தற்போது பெயரளவிலேயே செயற்படுகிறது.

சுமார் 5000 ஏக்கர் காணியும் பல மில்லியன் டொலர்கள் மதிப்பிலான கனிம வளங்களும் அங்கு உள்ளன. அதை வருமானம் ஈட்டும் மூலங்களாக மாற்ற திட்டமிட்டுள்ளோம்.

இதன்படி வருடத்திற்கு சுமார் 300 மில்லியன் டொலர் வருமானம் ஈட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

அதில் முதலீடு செய்யத் தயாராக உள்ள நிறுவனமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது-என்றார். (அ)

## வேலன் சுவாமி விவகாரத்தில் மன்னிப்பு கேட்ட அரியநேத்திரன்!

மட்டக்களப்பு, பெப். 09

வேலன் சுவாமியிடம் பிரதேசவாத ரீதியில் நடந்து கொண்டமை தவறானது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் போராட்டத்துடன் ஒன்றித்து செயற்படுபவரான வேலன் சுவாமிகளுக்கு எதிராக தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு எனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை தமிழரசுக்கட்சி மதவாதமோ, சாதிவாதமோ, இனவாதமோ அற்ற கட்சியாகவே இருக்கும்.

நாங்கள் வேலன் சுவாமிக்கு மேற்கொண்ட செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறக்கூடாது என்பதற்காகவே இதனை தெரிவிக்கின்றோம்-என்றார். (அ)

## மாலைதீவு பாதுகாப்பு படை பிரதானி இலங்கை வருகை



கொழும்பு, பெப். 09

மாலைதீவுகளின் பாதுகாப்பு படை பிரதானி லெப்டினன்ட் ஜெனரல் அப்துல் ரஹீம் அப்துல் லத்தீப் நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

பாதுகாப்பு செயலாளர், ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்னவை அவர் சந்திக்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் இராணுவத் தளபதியையும் சந்திக்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்பு சேவை கட்டளைகள் மற்றும் ஊழியர்கள் கல்லூரியின் அழைப்பிற்கிணங்க, மாலைதீவுகளின் பாதுகாப்பு படைபிரதானி நாட்டிற்கு வருகை தந்துள்ளார்.

அவர் இலங்கையின் பாதுகாப்பு சேவை கட்டளைகள் மற்றும் ஊழியர்கள் கல்லூரியில் பட்டமொன்றையும் பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

## நாடளாவிய ரீதியில் 728 பேர் கைது!

கொழும்பு, பெப். 09

நாடளாவிய ரீதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை வரை கடந்த 24 மணித்தியாலத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் 728 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பில் 558 சந்தேக நபர்களும் ஏனைய குற்றங்கள் தொடர்பில் 170 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 122 கிராம் ஹெரோயின் போதைப்பொருள், 101 கிராம் ஐஸ் போதைப்பொருள், 5 கிலோகிராம் 217 கிராம் கஞ்சா, 23,521 கஞ்சா செடிகள், 404 கிராம் மாவா, 1,852 போதை மாத்திரைகள் ஆகிய போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரபாகரனுடனேயே மோதியவன் நான்!

**சஜித்துக்கு எதிராக பொன்சேகா கொந்தளிப்பு**

கொழும்பு, பெப். 09

**“பிரபாகரனுடனேயே மோதியவன் நான், ஆக மோதல்களை எதிர்கொள்வதும், சவால்களை சந்திப்பதும் எனக்கு புதியவிடயமல்ல. கட்சி சட்டப்பூர்வமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தால் அதனை எதிர்கொள்ள தயார்.” - என்று சூளுரைத்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட்மார்ஷல் சரத்பொன்சேகா.**

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும், அக்கட்சியின் தவிசாளர் பொன்சேகாவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் தயா ரத்னாயக்கவை கட்சியில் இணைத்துள்ளமையே இம்மோதலுக்கு காரணம்.

இந்நிலையிலேயே பொன்சேகா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“சலுகைகளை அனுபவிப்பதற்காக நான் அரசியலுக்கு வரவில்லை.அரசியலுக்கு வந்திருக்காவிட்டால்தான் எனக்கு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கும். அமைச்சு செயலாளர் பதவிக்கூட வழங்க தயாராக இருந்தனர்.

ஆனாலும் நான் அவற்றை ஏற்கவில்லை. சலுகைகளுக்கு அடிபணிந்து சோரம்போக தயாரில்லை என்பதால்தான் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் அரசியலுக்கு வந்தேன். அன்று ராஜபக்சக்களுடன் மோதுவதற்கு எனக்கு முதுகெலும்பு இருந்தது. எனவே, தவறுகள் இடம்பெறும்போது மௌனம் காக்க முடியாது. அதற்கு எதிராக பொங்கியெழுந்துதான் பழக்கம்.

சரத்பொன்சேகா என்பவர் பிரபாகரனுடனேயே மோதியவர், அதன்பின்னர் கோட்டாபய ராஜபக்ச, மஹிந்த ஆகியோருடனும் மோதியுள்ளேன். எனவே, மோதல், சவால்களை எதிர்கொள்ளல் என்பனவெல்லாம் எனக்கு புதிதல்ல. நான் மாறப்போவதில்லை. இனி மாறவும் முடியாது. தூய்மையான வழியில் எனது கொள்கையின் பிரகாரம் அரசியலை முன்னெடுப்பேன்.

சட்டப்பூர்வமாக கட்சியால் முன்னெடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு முகங்கொடுப்பேன். தயாரத்னாயக்கவை கட்சியில் இணைத்துக்கொண்டமை தவறு. கட்சியில் கலந்துரையாடாமல் எடுக்கப்பட்ட முடிவு அது. அதனால்தான் கட்சிக்குள் அல்லாமல் பொது வெளியில் விமர்சிக்கின்றேன்.” - என்றார். (அ)

## ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவு? ஐவர் தனி வழி செல்லும் சாத்தியம்

கொழும்பு, பெப். 09

ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஏற்பட்ட பிளவின் காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தனி வழிசெல்லும் சாத்தியம் உருவாகியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அண்மைக்காலமாக தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது அமர்வு நேற்று நடைபெற்ற போது ஜனாதிபதியின் அக்கிராசன உரைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்திருந்தனர்.

எனினும் ஐக்கிய மக்கள் சக்தியின் ராஜித சேனாரத்ன, சம்பிக ரணவக, சரத் பொன்சேகா, குமார வெல்கம, இஷாக் ரஹ்மான் ஆகியோர் பாராளுமன்ற அரங்கில் தங்கியிருந்து ஜனாதிபதியின் உரையை முழுமையாக செவிமடுத்திருந்தனர்.

குறித்த ஐந்து பேருடன் இன்னும் சிலரும் மிக விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து வெளியேறக் கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. (அ)

## ஜகத் பிரியங்கர சத்தியப்பிரமாணம்

கொழும்பு, பெப். 09

சனத் நிஷாந்தவின் மறைவால் ஏற்பட்ட வெற்றிடத்தையடுத்து அவரின் இடத்துக்கு ஜகத் பிரியங்கர புதிய பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன முன்னிலையில் அவர நேற்று முற்பகல் சத்தியப்பிரமாணம் செய்தார்.

2020 பாராளுமன்ற தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் பொதுஜன பெரமுன கட்சிக்கு 5 பாராளுமன்ற ஆசனங்கள் கிடைத்தன.

விருப்பு வாக்கு பட்டியலில் சனத் நிஷாந்த முதலாவது இடத்தைப் பெற்றார். அவருக்கு அடுத்த இடங்களைப் பிடித்த அருந்திக்க பெர்னாண்டோ, சிந்தக்க அமல் மாயாதுன்னை மற்றும் அஷோக பிரியங்கர ஆகியோர் எம். பிக்களாகினர்.

ஜகத் பிரியங்கர விருப்பு வாக்குப் பட்டியலில் ஆறாவது இடத்தைப் பிடித்திருந்தார். சனத் நிஷாந்தவின் மரணத்தையடுத்து அவரின் இடத்துக்கு பிரியங்கர நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி கட்சியை சேர்ந்தவராவார். (அ)

## பெப்ரவரி 29இற்கு முன்னர் பெயர் பதிவு செய்யவேண்டும்!

கொழும்பு, பெப். 09

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில், தாமதமின்றி பெயர்களை பதிவு செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்யுமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிரந்தர வதிவிடத்தை மாற்றாது, திருமணம், கல்வி உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக வசிப்பிடத்தை மாற்றிய அனைவரும் வாக்காளர் இடாப்பில் தமது பெயரை பதிவு செய்ய வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குடும்ப உறுப்பினர்கள் வெளிநாடுகளில் வசிக்கும் பட்சத்தில், அவர்களுக்கு வாக்களிக்க முடியாவிட்டாலும் அவர்களது பெயர்களும் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். (அ)

## போக்குவரத்தில் பெண்கள் துன்புறுத்தப்படுவதை கட்டுப்படுத்த பொலிஸார் விசேட நடவடிக்கை!

கொழும்பு, பெப். 09

பொது போக்குவரத்தில் சிறுவர்கள், பெண்கள் துன்புறுத்தப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட நடவடிக்கையொன்றை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

பஸ்களில் நேற்று முன் தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையின் போது 42 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக நாளாந்தம் முறைப்பாடுகள் கிடைப்பதை அடுத்து பதில் பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொது போக்குவரத்து சேவைகளை பொதுமக்கள் அதிகளவில் பயன்படுத்தும் காலை 8 மணி - 10 மணி மற்றும் மாலை 5 மணி - இரவு 7 மணி வரையான காலப்பகுதிகளுக்கு முன்னுரிமையளித்து, பொது போக்குவரத்து சேவைகளில் சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகள் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்த காலகட்டத்தில் பஸ்கள், பஸ் நிலையங்கள், ரயில் நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளில் சிவில் உடையில் பொலிஸ் குழுக்கள் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## சந்தேக நபர்கள் திரவம் அருந்தி சுயநினைவை இழந்தமையால் அதிகாரிகள் பணி இடைநீக்கம்!

கொழும்பு, பெப். 09

ஆட்டுப்பட்டித்தெருவில் உள்ள காவலரணில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு சந்தேகநபர்கள், திரவம் ஒன்றை அருந்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கடமையில் ஈடுபட்டிருந்த மூன்று காவல்துறை உத்தியோகத்தர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் இரண்டு பேரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், கடந்த ஜனவரி மாதம் 23ஆம் திகதி ஜிந்துபிட்டி பகுதியில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், குறித்த சந்தர்ப்பத்தில் துப்பாக்கிச் சூட்டை நடத்த வந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்தநிலையில், நேற்றைய தினம் சந்தேகநபர் ஒருவரின் உறவினர்கள் என்று கூறிக்கொண்டு இரண்டு பேர் இவர்களை பார்ப்பதற்காக காவல்நிலையத்துக்கு வருகை தந்துள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவருக்கும் இதன்போது உறவினர்களால் உணவு வழங்கப்பட்டுள்ளது.

உணவை உட்கொண்டதன் பின்னர் சந்தேகநபர்கள் இரண்டு பேரும் சுயநினைவை இழந்ததாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அவர்களுக்கு வழங்கப்பட்ட திரவ உணவில் விசம் கலந்துள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த திரவத்தை அருந்திய சந்தேகநபர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## ரணில் மூளைச் சலவை செய்ததால்தான் அனுரகுமார இந்தியாவுக்கு சென்றுள்ளார்

**கூறுகிறார் அமைச்சர் நிமால்**



கொழும்பு, பெப். 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய மக்கள் சக்தியை மூளைச்சலவை செய்துள்ளார் அதன் காரணமாகவே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க இந்திய தலைவர்களை சந்திக்க சென்றுள்ளார் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஆதிக்கம் குறித்து உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் இதன் காரணமாகவே இந்தியா சென்றுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பழைய ஆடைகளை அணிந்தவர்கள் கோட் அணிகின்றனர் இது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம் இது ரணில் விக்கிரமசிங்க மூளைச்சலவை செய்ததால் ஏற்பட்ட மாற்றம் எனவும் அர் தெரிவித்துள்ளார்.

அதானி குழுமத்துடன் இணைந்து செயற்படுவதற்காக தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் எவ்வாறு அரசாங்கத்தை விமர்சித்தார்கள் என்பது எங்களிற்கு தெரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# சங்கர்புரத்தில் ஏ.ரி 378 புதிய நெல் இன அறுவடை!

## பிரதி விவசாயப் பணிப்பாளர் பரமேஸ்வரன் பங்கேற்பு



அம்பாறை, பெப். 09

**றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட சங்கர்புரம் கிராமத்தில் புதிய வெள்ளை நெல்லினமான ஏ.ரி 378 முன்மாதிரியாக செய்கை பண்ணப்பட்ட நெற்செய்கையின் அறுவடை நேற்று புதன்கிழமை வெற்றிகரமாக நடைபெற்றது.**

றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுக்கு பொறுப்பான விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர் கே.கிலசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் எம். பரமேஸ்வரன் பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிறுவகத்தின் விவசாய ஆராய்ச்சி நிபுணர் கே.ரோகண திலகசிறி உதவி விவசாய பணிப்பாளர்களான எஸ்.சித்திரவேல் திருமதி. நித்தியா நவரூபன் ஆகியோர் அதிதிகளாகவும் தெற்கு வலய விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சங்கர்புரம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் மற்றும் மண்டூர் பிரதேச விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

முன்மாதிரி துண்டச் செய்கையை விவசாய போதனாசிரியரின் ஆலோசனைக்கேற்ப தயாபரன் எனும் விவசாயி சிறப்பாக செய்கை பண்ணிய வயல் நிலத்தில் விவசாய உத்தியோகத்தர்களால் நெல் அறுவடை செய்யப்பட்டு பயிர்வெட்டு அளவீடு மூலம் விளைச்சல் கணிக்கப்பட்டது.

இம்முறை சாதகமற்ற கால நிலை நிலவிய போதிலும்கூட இந்த இனமானது நோய்பீடை என்பவற்றுக்கு எதிர்ப்பு சக்தி நிறைந்ததாகவும் நல்ல விளைச்சலை கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் தரும் இனமாக இதனை எதிர்வரும் போகத்திலிருந்து இப்பகுதி விவசாயிகள் செய்கைபண்ண எதிர்பார்த்துள்ளனர். (அ)

# 'கொத்துவேலி' கவிதை நூல் வெளியீடு!



அம்பாறை, பெப். 09

பெரியநீலாவணை பைந்தமிழ்ச் சுடர் சிவபாதசுந்தரம் சுதாகரன் எழுதிய "கொத்துவேலி" கவிதை நூல் வெளியீட்டு விழா திருமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், எழுத்தாளரும் மாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளருமாகிய ச.நவநீதன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு விருந்தினர்களாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களங்களின் மாகாணப் பணிப்பாளர்கள், கிழக்கு பல்கலைக்கழக திருமலை வளாக முதல்வர் உள்ளிட்ட பல உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

எண்ணம்போல் வாழ்க்கை இலக்கியமன்றத்தின் ஒருங்கமைப்பில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவின் வரவேற்புரையை எண்ணம்போல் வாழ்க்கை இலக்கிய மன்றத் தலைவர் எழுத்தாளர் கனக. தீபகாந்தனும், "கொத்துவேலி" நூலாசிரியர் பற்றிய அறிமுகவுரை, நூல்பற்றிய சிறப்பு நயவுரையை சமூகசேவைத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எழுத்தாளர் இரா.கி.இளங்குமுதன் மற்றும் ஓய்வுநிலை அதிபர் கவிஞர் இரா.இரத்தினசிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிவபாதசுந்தரம் சுதாகரனின் "நீலையூர் சுதா" எனும் புனைபெயருடன் கிராமிய மணங்கமளும் வகையில் நாட்டுப்புற வாழ்க்கை, நிகழ்கால நாட்டு நடப்புக்கள் என அனைவரும் ரசித்து வியக்கும் வகையிலான உயிரோட்டமுள்ள கவிதைப் படைப்புக்கள் கொண்ட இந்நூல் "கொத்துவேலி" எனும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளது.

திருமதி லலிதா சுதாகரனால் "கிடுகு வீடு" எனும் தலைப்பிலும் கவிதைத் தொகுப்பொன்றை வெளியிட்டு பெருவரவேற்பை பெற்ற "நீலையூர் சுதா", பல ஆலய இறுவட்டுகளுக்காக பாடல்களையும் எழுதியுள்ளார்.

அம்பாரை மாவட்டத்தின் வடக்கு எல்லையின் விவசாயக் கிராமமான பெரியநீலாவணையை பிறப்பிடமாக கொண்ட "கொத்துவேலி" நூலாசிரியரான பைந்தமிழ் சுடர் சுதாகரன்

கிழக்கு மாகாண மீன்பிடி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பெண் சட்டத்தரணி மீதும் கணவன் மீதும் தாக்குதல்!

## பெண் உட்பட இருவருக்கு விளக்கமறியல்

மட்டக்களப்பு, பெப். 09

மட்டக்களப்பு நகரில் நீதிமன்றத்திற்கு அருகாமையிலுள்ள சட்டத்தரணி ஒருவரின் காரியாலயத்தினுள் அத்துமீறி நுழைந்து பெண் சட்டத்தரணியையும் அவரது கணவரையும் தாக்கிய சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பெண் ஒருவர் உட்பட இருவரையும் விளக்கமறியலில் வைக்கெமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் எம்.எச். முகமட் ஹம்ஸா உத்தரவிட்டார்.

இதனையடுத்து தாக்குதலுக்கு உள்ளான சட்டத்தரணியும் அவரது கணவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இந்நிலையிலையில் கைது செய்யப்பட்ட இருவரையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச். முகமட் ஹம்சா முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# 'கல்விக்கு உதவிக் கரம்' எனும் பொருளில் நிந்தவூரில் பாடசாலை உபகரணங்கள்



அம்பாறை, பெப். 09

நிந்தவூர் பல்கலைக்கழக மாணவர்களின் சமூக சேவை ஒன்றியம், கல்விக்கு உதவிக்கரம் 2.0 என்ற தொனிப் பொருளின் கீழ் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

நிந்தவூர் ஜேர்மன் நட்புறவு ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (அ)

# மட்டக்களப்பில் நெல் கொள்வனவில் மோசடி

## 8 தராசுகள் கைப்பற்றல்

மட்டக்களப்பு, பெப். 09

மட்டக்களப்பில் விவசாயிகளிடம் கள்ளத் தராசின் அரசாங்கத்தின் அனுமதியளிக்கப்படாத தராசின் மூலம் நெல் கொள்வனவில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளுக்கு எதிராக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புதன்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையில் கள்ளத் தராசின் மூலம் மோசடியாக நெல் கொள்வனவு செய்துவந்த 8 வியாபாரிகளின் தராசுகளை கைப்பற்றியதுடன் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்குதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அளவீட்டு திணைக்கள அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில் விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்துவரும் வெளிமாவட்ட வியாபாரிகள் தராசில் மோசடி செய்து விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்துவருவதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி முரளிதரனின் கவனத்திற்கு பாதிக்கப்பட்ட விவசாயிகள் கொண்டுவந்தனர்.



இந்த நிலையில் வயல்பகுதிகளில் நெல் கொள்வனவில் ஈடுபட்டுவரும் வியாபாரிகளின் தராசை பரிசோதனை செய்யுமாறு அரசாங்க அதிபர் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இதனையடுத்து சம்பவதினமான நேற்று புதன்கிழமை மாவட்ட பணிப்பாளர் வி. விக்கினேஸ்வரன் தலைமையில் பரிசோதனை உத்தியோகத்தர்களான எம்.கிருஷ்ணானந்தன், எம்.ஆர்.எம்.றைஸ்கான் உள்ளிட்ட அதிகரிகள் செங்கலடி பிரதேசத்திலுள்ள வயல் பகுதிகளில் லொறிகளில் நெல் கொள்வனவு செய்துவரும் வியாபரிகளின் தராசுகளை பரிசோதனை செய்தனர்.

இதில் அரச அனுமதியற்ற 5 தராசுகளும் அளவையில் மோசடி செய்யப்பட்ட 3 தராசுகளுமாக 8 தராசுகளை கைப்பற்றியதுடன் 8 வியாபரிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் கைப்பற்றப்பட்ட தராசுகளை திணைக்களத்திற்கு கொண்டுவந்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட தராசுகளை அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்திற்கு அரசாங்க அதிபர் நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் தொடர்ந்தும் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு பணித்துள்ளார்.



# ஆப்கான் தொடரிலும் தசூன் ஷானக நீக்கம்!

கொழும்பு, பெப். 09

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள போட்டிக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 16 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியிலும் தசூன் ஷானக நீக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரிலும் ஷானக அணியில் இடம்பெறவில்லை. அவருடன், நுவந்து பெர்னாண்டோ மற்றும் ஜெப்ரி வொண்டர்சே ஆகியோரும் அணியில் இல்லை.

கடந்த 21 போட்டிகளில் ஷானக ஓர் அரைச்சதம் மட்டுமே அடித்துள்ளார். அவரின் ஓட்ட சராசரி 12.25 ஆகும். அவரின் மோசமான துடுப்பாட்டம் காரணமாகவே அவர் அணியில் இடம்பெறவில்லை. முன்னதாக ஒருநாள் அணியின் தலைவராக இருந்த அவர் சிம்பாப்வே அணியுடனான தொடரில் அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

**அணி விவரம்**

குஷல் மெண்டிஸ் (அணித் தலைவர்), சரித் அசலங்க, பதும் நிஷங்க, அவிஸ்க பெர்னாண்டோ, செவன் டானியல், டுனித் வெல்லாலகே, ஜனித் லியன்க, பிரமோத் மதுசன், சாமிர கருணாரட்ன, அகில தனஞ்சய, மஹீஷ் தீக்ஷன, வனிந்து ஹசரங்க, டில்ஷான் மதுஷங்க, சதீர சமரவிக்கிரம, சஹான் ஆராச்சிகே, டுசந்த சாமீர (ஐ)

# டோனியே சிறந்த தலைவர்

## முகமது ஷமி தெரிவிப்பு



சென்னை, பெப். 09

இந்திய அணிக்காக தான் விளையாடிய போட்டிகளில் தலைசிறந்த தலைவர் என்றால் அது டோனிதான் என இந்திய வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி தெரிவித்துள்ளார். விராட் கோலி சிறந்த துடுப்பாட்ட வீரர் என்றும், ரோஹித் சர்மா அபாயகரமான துடுப்பாட்ட வீரர் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் அதிக விக்கெட் வீழ்த்திய பந்துவீச்சாளராக ஜொலித்தவர் ஷமி. 7 போட்டிகளில் விளையாடி 24 விக்கெட்களை அவர் கைப்பற்றியிருந்தார். இதில் 3 போட்டிகளில் 5இற்கும் அதிகமான விக்கெட்களை கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அவர் டோனி சிறந்த கேப்டன் என தெரிவித்துள்ளார்.

டோனி தலைமையிலான இந்திய அணியில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் ஷமி அறிமுகமானார். கோலி தலைமையிலான இந்திய அணியின் சிறந்த திறன் கொண்ட பந்துவீச்சாளராக உருவெடுத்தார். தற்போது ரோஹித் சர்மா தலைமையிலான அணியில் ஆஸ்தான பந்துவீச்சாளராக ஷமி வலம் வருகிறார்.

“இந்திய அணிக்கு பல வெற்றிகளை தேடிதந்த மகேந்திர சிங் டோனிதான் சிறந்த தலைவர். ஒப்பீட்டளவில் சிறந்த தலைவர் யார் என்பதற்கு பதில் சொல்ல முடியாது. ஆனால், அதிக கிண்ணங்களை வென்றவர் என்ற அடிப்படையில் டோனிதான் சிறந்தவர்” என ஷமி தெரிவித்துள்ளார். (ஐ)

# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் நியூசிலாந்து முதலிடத்தில்!



டுபாய், பெப். 09

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் நியூசிலாந்து அணி அவுஸ்திரேலியா, இந்தியா அணிகளை பின்தள்ளி முதலிடம் பிடித்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியை 249 ஓட்டங்களால் வெற்றி கொண்டதன் மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளது.

இதேநேரம், முதலிடத்தில் இருந்த அவுஸ்திரேலியா 2ஆம் இடத்துக்கும் இந்தியா 3ஆம் இடத்துக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

# விருதை பகிர மறுத்த ரச்சின்!

வெலிங்டன், பெப். 09

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் ஆட்டநாயகனாக தெரிவான ரச்சின் வில்லியம்சனுடன் விருதைப் பகிர மறுத்துள்ளார்.

தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 281 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. முதலில் ஆடிய நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சில் 511 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா இரட்டை சதமும் கேன் வில்லியம்சன் சதமும் விளாசினார்.

இதனை தொடர்ந்து ஆடிய தென்னாபிரிக்கா முதல் இன்னிங்சில் 162 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது.

349 ஓட்டங்கள் முன்னிலையில் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய நியூசிலாந்து வில்லியம்சன் சதம் மூலம் 179 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்தியது. இதனால் தென்னாபிரிக்கா அணிக்கு 529 ஓட்டங்கள் வெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ந்து ஆடிய தென்னாபிரிக்கா 247 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இந்த போட்டியில் இரட்டைச் சதம் விளாசிய ரச்சின் ரவீந்திரா ஆட்ட நாயகனாகத் தெரிவானார். இந்நிலையில் உங்களுக்கு நிகராக இந்தப் போட்டியில் 2 சதங்கள் அடித்த வில்லியம்சனுடன் ஆட்டநாயகன் விருதை பகிர்ந்து கொள்வீர்களா? என்று ரச்சின் ரவீந்தராவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் மறுப்பு தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியவை வருமாறு,

நம்முடைய திறனுக்கு தகுந்தாற்போல் அணியின் வெற்றியில் பங்காற்றுவது நல்ல உணர்வை கொடுக்கிறது. நான் இந்த இன்னிங்ஸை உயரியதாக மதிப்பிடுவேன். ஏனெனில், வெற்றிக்காக நாங்கள் அங்கே கடின மான இணைப்பாட்டத்தை அமைத்து விளையாடினோம்.

ஆட்டநாயகன் விருதை கண்டிப்பாகப் பகிர மாட்டேன். அவர் 31 சதங்கள் அடித்துள்ளார். எனவே, ஒரு சதம் மட்டுமே அடித்துள்ள நான் அதை அவருக்கு கொடுக்கப் போவதில்லை. எந்த நேரத்திலும் அணியின் வெற்றியில் பங்காற்றுவது எப்போதுமே விசேடமாகும் - என்றார். (ஐ)





# அடுத்த இரு போட்டிகளிலும் கோலி விளையாடமாட்டார்?

புதுடில்லி, பெப். 09

இங்கிலாந்து - இந்தியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது மற்றும் நான்காவது போட்டிகளிலும் இந்தியாவின் விராட் கோலி விளையாடமாட்டார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்தத் தொடரில் முதல் 2 டெஸ்ட் போட்டிகளிலும் கோலி விளையாடவில்லை. இந்த நிலையிலேயே, அவர் அடுத்து வரும் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடமாட்டார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இறுதி 3 போட்டிகளிலும் கோலி விளையாடுவார் என்று எதிர்பார்த்த நிலையில் அவர் விளையாடாதது இந்திய அணி ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையேயான 3ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகிறது. (ஐ)

# ஐ. பி. எல். தொடரில் ரிஷப் பந்த் ஆடுவார்!

## றிக்கி பொண்டிங் தகவல்



புதுடில்லி, பெப். 09

இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ. பி. எல். தொடரில் ரிஷப் பந்த் விளையாடுவார் என்று டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் பயிற்சியாளர் றிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

2022, டிசெம்பர் 30ஆம் திகதி ரிஷப் பந்த் காரில் தனியாக பயணித்தபோது விபத்தில் சிக்கினார். படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில், தற்போது காயத்தில் இருந்து மீண்டு வருகிறார். அவர் களம் திரும்ப ஓராண்டு காலம் ஆகும் என சொல்லப்பட்டது. எனினும், தீவிர பயிற்சியின் காரணமாக உடல்நலன் தேறி வருகிறார் ரிஷப். பெங்களூரில் உள்ள இந்தியாவின் தேசிய கிரிக்கெட் அக்கடமிக்கு சென்றவர் கிரிக்கெட் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இதனிடையே, இந்த ஆண்டு நடக்கவிருக்கும் ஐ. பி. எல். தொடரில் ரிஷப் பந்த் விளையாடுவார் என்று டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் பயிற்சியாளர் றிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக றிக்கி பொண்டிங் அளித்த பேட்டியில்,

”இந்த ஐ. பி. எல். தொடரில் விளையாடுவதில் ரிஷப் உறுதியாக இருக்கிறார். உண்மையில் இப்போது ரிஷப் உற்சாகமாக இருக்கிறார். ஆனால், அவரால் தொடர் முழுவதும் விளையாட முடியுமா, தொடர் முழுவதும் விக்கெட் காப்பு பணியை செய்ய முடியுமா என்பதுதான் தெரியவில்லை. அவரிடம் கேட்டால் “தொடர் முழுவதும் விளையாடுகிறேன். நான்காவது வரிசை வீரராக துடுப்பாட்டம் செய்வேன். இதற்கு உறுதியளிக்கிறேன்“ என்கிறார். அந்த மனநிலையில் தான் அவர் இருக்கிறார்.

ரிஷப் ஆற்றல் மிகுந்த வீரர் என்பதில் சந்தேகம் இல்லை. அவர் எங்கள் அணியின் தலைவர். உண்மையை சொன்னால் கடந்த ஆண்டு நாங்கள் அவரை தவறவிட்டோம். இந்தத் தொடரில் அனைத்து போட்டிகளிலும் இல்லாவிட்டாலும் குறைந்தது 10 போட்டிகளிலாவது விளையாடுவார் என்று நம்புகிறேன். பந்த் அணியை வழிநடத்தத் தயாராக இல்லை என்றால் டேவிட் வோர்ணர் தலைமைப் பொறுப்பை ஏற்பார்” என்றார். (ஐ)

# மாணவருக்கு வட்டியற்ற கடன் இதுவரை வழங்கப்படவில்லை

## சஜித் பிரேமதாச சபையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 09

**தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் உயர் கல்விக்காக வழங்கப்பட்டு வந்த வட்டியில்லா கடன் திட்டம் கடந்த காலங்களில் இடை நிறுத்தப்பட்டிருந்தது.**

**ஐக்கிய மக்கள் சக்தி, இவ்விவகாரம் தொடர்பில் மீண்டும் பாராளுமன்றத்தின் கனவத்திற்கு கொண்டு வந்த போது கடனை வழங்குவதாக தெரிவித்தபோதிலும் தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கிடைக்க வேண்டிய கடன் வசதி இன்னும் கிடைக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**



கடனுதவி வழங்குவதற்கான அனுமதி மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதற்கான கற்கை நெறிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது, இந்த கடன் வழங்கப்படாமல் உள்ளதால், விரைவில் இந்த கடன் வசதிகளை வழங்குங்கள். இந்த கடன் வசதி வழங்கப்படாததால் அவர்களுக்கு பல்கலைக்கழகங்களில் நுழைவதற்கான வாய்ப்புகளும் மறுக்கப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் பொறுப்பான நபர்கள் இன்றி பெரும் செல்வந்தர்களுக்கு உரிய கடன்களை வழங்கி, அந்தக் கடன்கள் கோடிக்கணக்கில் செலுத்தப்படாத நிலையில், இவர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டாலும், இந்த இரு பல்கலைக்கழகங்களில் சில மாணவர்கள் கடனை செலுத்தாத காரணத்தால், புதிய மாணவர்களுக்கு கடன் வழங்க மறுப்பதை ஏற்க முடியாது. இது அரசாங்கத்துடன் தொடர்புடைய நம்பகத்தன்மை சார்ந்த பிரச்சினை என்பதால் இதனை உடனடியாக இன்றே நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி, அமைச்சர்கள் மற் றும் மத்திய வங்கியின் உத்தரவுகளை இந்த வங்கிகள் புறக்கணித்தால், இதில் ஈடுபட்டுள்ள அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கோரிக்கை விடுத்தார். (அ)

# வைத்தியரை கடத்தி 40 இலட்சம் கப்பம் கோரிய ஆசிரியர் சிக்கினார்!

கொழும்பு, பெப். 09

வைத்தியர் ஒருவரை மிட்டியாகொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்கு கடத்திச் சென்று 40 இலட்சம் ரூபாய் கப்பம் கோரிய குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹிக்கடுவை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் மிட்டியாகொட பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய நபராவார். இவ்வாறு கடத்தப்பட்டவர் பதுளை பிரதேசத்தில் உள்ள வைத்தியரொருவராவார்.

சந்தேக நபரான மேலதிக வகுப்பு ஆசிரியர் குறித்த வைத்தியரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மிட்டியாகொட பிரதேசத்திற்கு வரவழைத்து அவரை பலாத்காரமாக காரில் ஏற்றிச்சென்று மிட்டியாகொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்குள் இரண்டு நாட்களாக தடுத்து வைத்துள்ளார்.

தான் இதுவரை மூவரை கொலை செய்துள்ளதாகவும் தான் கோரும் 40 இலட்சம் ரூபாய் பணத்தை உரிய கால அவகாசத்திற்குள் செலுத்தாவிடில் உங்களையும் கொலை செய்து விடுவதாக வைத்தியரிடம் கூறியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடத்தப்பட்ட வைத்தியருக்கு வழங்கப்பட்ட கால அவகாசம் முடிவடைவதற்கு 4 மணித்தியாலங்கள் இருந்த போதே குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# 37 கோடி ரூபா மதிப்புடைய மாணிக்கக் கற்கள் சிக்கின!

## தேரர் உட்பட இருவர் கைது

கொழும்பு, பெப். 09

இராணுவப் புலனாய்வுப் படையினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கொஸ்லாந்தை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 2 நீல மாணிக்கக் கற்களை சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்ய முற்பட்டபோது கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றிவளைப்பின் போது கைப்பற்றப்பட்ட மாணிக்கக் கற்கள் சுமார் 37 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவிருந்த நிலையில் சம்பவம் தொடர்பில் வெலிவேரிய பிரதேசத்தின் தேரர் ஒருவர் உட்பட இருவர் கொஸ்லாந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட மாணிக்கக் கற்கள் விகாரை வடிவிலானது என தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொஸ்லாந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# விவசாயிகளுக்கு துப்பாக்கி!

கொழும்பு, பெப். 09

விவசாய அமைச்சு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஏக்கர் பரப்பளவை, இரண்டு ஏக்கர் விளைநிலங்களாகக் குறைத்து, அவற்றின் உரிமையாளர்கள் தங்கள் பயிர்களைப் பாதுகாப்பதற்காக துப்பாக்கிகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

காட்டுப்பன்றிகள், குரங்குகள் மற்றும் இராட்சத அணில்கள் தங்கள் பயிர்களை அழித்ததால் பெரும்பாலான விவசாயிகள் தங்கள் பயிர்களை கைவிட்டதாகவும், அதனால் ஏற்பட்ட சேதம் ஐம்பது சதவீதத்தை தாண்டியுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே, வனவிலங்குகளால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க தற்போது மாற்று வழி இல்லை என்பதால், விவசாயிகளின் கோரிக்கையை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும்.

2023 ஆம் ஆண்டில், வன விலங்குகள் நாட்டில் 300 மில்லியன் தென்னந்தோப்புகளை அழித்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில், குரங்குகள் மற்றும் இராட்சத அணில்களால் 96 மில்லியன் தேங்காய்கள் அழிக்கப்பட்டன. இந்த வன விலங்குகள் மொத்த பயிர்களில் 40 சதவீதத்தை நாசம் செய்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

வன விலங்குகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க முடிந்தால், புதிய பயிர்களை பயிரிடாமல் உணவில் தன்னிறைவு அடைய முடியும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

100,000 குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான விவசாய அமைச்சின் முன்மொழிவை எதிர்த்து வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் , பல அமைப்புகள் மற் றும் தனிநபர்கள் (மொத்தம் 30 மனுதாரர்கள்) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# ரணிலைச் சந்தித்து பேசிய பொன்சேகா !

கொழும்பு, பெப். 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி ஆற்றிய அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரையை அடுத்து இடம்பெற்ற இந்த சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்த நிலையில் இதன் போது பேசப்பட்ட விடயங்கள் என்ன என்பது குறித்து இது வரை வெளியாகவில்லை.

இதேநேரம் ஜனாதிபதியின் கொள்கை பிரகடனத்தை புறக்கணிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்திருந்த போதிலும், சரத் பொன்சேகா உட்பட சில உறுப்பினர்கள் ஜனாதிபதியின் உரையின் போது பாராளுமன்றத்தில் பிரசன்னமாகியிருந்தனர்.

இதேநேரம் நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தியின் மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தனித் தனியாக சந்தித்து கலந்துரையாடியதாக தகவல்கள் தெரிவித்தன. (அ)

# விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, பெப். 09

மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி சுவரில் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் உயிரிழந்தவர் களுத்துறை கட்டுகுருந்த பிரதேசத்தைச் சேர்ந்த பிரவீன் விஸ்வஜித் என்ற 19 வயதுடைய இளைஞர் என பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறையில் இருந்து ஹெனிட்டியங்கலை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஹெனிட்டியங்கல பாலத்திற்கு அருகில் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் அருகில் இருந்த சுவரில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இளைஞன் பலத்த காயமடைந்து களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(அ)

# பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் மீது மந்துவில் பகுதியில் வைத்து தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 09

சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் மீது திருட்டுக் கும்பலொன்று தாக்குதல் நடத்தியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சாவகச்சேரி மந்துவில் பகுதியில் கும்பலொன்று வீதியில் பொருத்தப்பட்டிருந்த மின் குமிழ்களைத் திருடிக்கொண்டிருப்பதை அவதானித்த அப்பகுதி மக்கள் இது குறித்து சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கு. குகானந்தனுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து அங்கு வந்த குகானந்தன் குறித்த கும்பலைத் தடுக்க முற்பட்ட வேளை, அக்கும்பல் அவரை கடுமையாகத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் தாக்குதலில் காயமடைந்த குகானந்தனை மீட்ட அப்பகுதி மக்கள் அவரை வைத்திய சாலையில் அனுமதித்துள்ள நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## எதிர்க்கட்சி...

ஜனாதிபதியின் சிம்மாசன உரையிலி
ருந்து நாங்கள் எழுந்து சென்றுவிட்
டோம். எங்கள் ஆதரவு தேவைப்பட்
டால் - எங்களுக்கு மரியாதை தேவை
- எங்களுக்கு அதிகார பரவலாக்கம்
வழங்கப்படவில்லை - எங்களின் அமை
தியான போராட்டம் மீது தாக்குதல்
நடத்தப்பட்டது. தடை செய்யப்பட்ட
பகுதிக்கு வெளியே ஆர்ப்பாட்டம்
நடத்த அனுமதி பெற்றோம்.

எங்களை அடித்துவிட்டு ஆதரவு
கேட்க உங்களுக்கு வெட்கமாக இல்
லையா?ஆதரித்தால் நாங்கள் கிராமங்
களுக்கு செல்ல முடியாது. எதிர்க்கட்சிக
ளின் ஆதரவும் இப்படித் தான் கிடைக்
கிறது - என்றார். (ஐ)

## காணாமல்...

முன்னிலைப்படுத்த வேண்டும். தவறும்
பட் சத்தில் அவர் காணாமல் ஆக்கப்பட்
டவராக கருதி அவருக்கு 10 இலட்சம்
ரூபாயை நட்டஈடாக வழங்க வேண்டும்
என்று நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்தத் தகவலை காணாமல் ஆக்கப்
பட்டவர் சார்பில் வாதாடிய மூத்த
சட்டத்தரணி கே. எஸ். ரத்தினவேல்
தெரிவித்தார்.

கடந்த 2006 மே 5ஆம் திகதி கந்த
சாமி இளரங்கன் (வயது 28) என்பவர்
காணாமல் போனார் என்று அவரின்
தாயார் முறைப்பாடு செய்திருந்தார்.
வாகன சாரதியான இவர், உமாதரன்
என்பவரை கட்டுநாயக்கா சர்வதேச
விமான நிலையத்துக்கு ஏற்றிச் சென்ற
போதே ஓமந்தை சோதனை சாடியில்
தடுக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து
அவர்கள் இருவரும் காணாமல்
போயிருந்தனர்.

உமாதரன் தொடர்பில் வழக்கு எது
வும் தொடுக்கப்படாத நிலையில், இள
ரங்கன் தொடர்பாக அவரின் தாயார்
வவுனியா மேல்நீதிமன்றில் தொடுத்த
ஆட்கொணர்வு மனுமீதான விசாரணை
நேற்று முன்தினம் நடந்தது. இதன்
போதே நீதிபதி மேற்கண்டவாறு உத்தர
விட்டிருந்தார். (ஐ)

## தகவல்...

தமிழீழ விடுதலைப் புலிகள் எவரும்
சரணடையவில்லை. இலங்கை அரசாங்
கத்திடமே புலிகள் சரணடைந்தார்கள்."
என பதில் வழங்கி ஊடகவியலாளர்
கோரியிருந்த தகவல்களை வழங்க இரா
ணுவம் மறுத்திருந்தது.

இதற்கு எதிராக தகவலறியும்
ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்டி
ருந்த மேன்முறையீடு 3 வருடங்க ளுக்குப்
பின்னர் 2022ஆம் ஆண்டு விசாரணைக்கு
எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த விசாரணைகளில் மூத்த சட்
டத்தரணி கே. எஸ். ரத்னவேல், சட்டத்
தரணி சுவஸ்திகா அருலிங்கம் ஆகியோர்
முன்னிலையாகினர். ஊடகவியலாளர்
தரிந்து ஜயவர்த்தன மற்றும் பஷான் ஜய
சிங்க ஆகியோரும்
கலந்துகொண்டிருந்தனர்.

நீண்ட விசாரணைகளின் பின்னர்
சரணடைந்த புலிகள் தொடர்பான
தகவல்களை வழங்க மறுத்த இராணு
வத்தின் தீர்மானத்துக்கு அனுதியளிக்கும்
வகையில், 2023ஆம் ஆண்டு நவம்பர்
08ஆம் திகதி தகவலறியும் ஆணைக்குழு
தீர்ப்பு வழங்கியிருந்தது.

ஆணைக்குழு வழங்கிய தீர்ப்புக்கு
எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில்
ஊடகவியலாளர் சார்பில் மேன்முறை
யீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்த
நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்ற
நீதியரசர் டி. என். சமரகோன் முன்னி
லையில் இந்த மனு நேற்றுமுன்தினம்
பரிசீலனைக்கு எடுத்துகொள்ளப்பட்ட
போதே மேற்கண்டவாறு உத்தரவு
பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மனுவை பரிசீலனை செய்திருந்த
நீதியரசர் டி. என். சமரகோன் மனுதாரர்
சார்பில் ஆரம்பக்கட்ட பரிசீலனைகள்
அவசியமில்லை எனவும் எதிர்வரும்
மார்ச் 28ஆம் திகதி இலங்கை இராணு
வம் நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென
உத்தரவிட்டார். (ஐ)

## 30வழக்குகள்...

யாப்பா அபேவர்த்தன தலைமையில்
பாராளுமன்றம் கூடியது.

இதன்போதே இந்த விடயத்தை
சபைக்கு அறிவித்த சபாநாயகர், 2024
ஜனவரி 23ஆம் திகதி அறிவித்தலில்
குறிப்பிடப்பட்ட ஆறு மனுக்கள் மற்
றும் 2024 ஜனவரி 24 ஆம் திகதி அறி
வித்தலில் குறிப்பிடப்பட்ட 18 மனுக்க
ளுக்கு மேலதிகமாக, அரசமைப்பின்
121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம்
"பயங்கரவாத எதிர்ப்பு" சட்டமூலம்
தொடர்பாக உயர் நீதிமன்றத்துக்கு
மேலும் 6 மனுக்கள் தாக்கல் செய்யப்
பட்டுள்ளன. அவற்றின் பிரதிகள்
கிடைக்கப்பெற்றுள்ளன - என்றும்
கூறினார். (ஐ)

## முதியோர்...

உதவித்தொகை 7 ஆயிரத்து 500
ரூபாயாக அதிகரிக்கப்பட் டுள்ளது.

மேலும், 2 ஆயிரம் ரூபாயாக இருந்த
முதியோர் உதவித் தொகை 3 ஆயிரம்
ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நிகழ்நிலை...

உயர்நீதிமன்றத்தின் திருத்த யோச
னைகளுக்கு அப்பால்பட்டு நிகழ்நிலை
காப்புச் சட்டம் இயற்றப் பட்டுள்ளது.
ஆகவே விசேட கட்சித் தலைவர்
கூட்டத்தை நடத்துங்கள் என்று
பாராளுமன்றத்தில் நேற்று
வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலை வர்
சஜித் பிரேமதாஸ உட்பட எதிர
ணியினர் சபாநாயகரிடம் வலியுறுத்தி
னர். இதன்போது எழுந்து கருத்து
வெளியிட்டபோதே நீதி அமைச்சர்
மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சட்டமியற்றல் தொடர் பில்
1978 ஆம் ஆண்டு அரசமைப்பில்
தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.
தயாரிக்கப்படும் சட்ட வரைவின்
அரசமைப்பின் வகிபாகத்தை சட்டமா
அதிபர் உறுதிப்படுத்தியதன் பின்னர்
தான் சட்டவரைவு அமைச்சரவைக்கு
சமர்ப்பிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் முதல் வாசிப்
புக்கு சமர்ப்பிக்கப்படும் சட்ட மூலத்தை
14 நாட்களுக்குள் உயர்நீதி மன்றத்தில்
சவாலுக்குட்படுத்தும் உரிமை நாட்டு
மக்களுக்கு உண்டு. நிகழ்நிலை காப்பு
சட்டமூலத்துக்கு எதிராக
உயர்நீதிமன்றத்தில் 45இற் கும்
அதிகமான அடிப்படை உரிமை மீறல்
மனுக்கள் தாக்கல் செய்யப்பட் டன.

மனுக்கள் முறையான விசார ணைக்கு
எடுத்துக்கொள்ளப்பட்ட போது
அரசாங்கம் சார்பில் சட்டமா அதிபர்
பல திருத்தங்களை முன்வைத் தார்.
அதற்கமைய சட்டமூலம் தொடர்பில்
உயர்நீதிமன்றம் பல அறிவுறுத்தல்களை
முன்வைத்தி ருந்தது.

உயர்நீதிமன்றத்தின் திருத்தங்கள்
பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு
வழங்கப்பட்டு, குழு நிலை வேளை யின்
போது திருத்தம் செய்யப்பட் டது.
பாராளுமன்றத்தில் இயற்றப் பட்ட ஒரு
சட்டம் தொடர்பில் கேள்வி கேட்கும்
உரிமை உயர்நீதிமன் றத்துக்கு
கிடையாது. தயாரிக்கப் படும்
சட்டமூலங்கள் அரசமைப்புக்கு
முரணா? அல்லது முரணனற்றதா என்
பதை பரிசீலனை செய்யும் அதிகாரம்
மாத்திரமே உள்ளது.

அரசமைப்புக்கு முரணான ஒரு
சரத்து காணப்படுமாயின் அதனை
நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு
பெரும்பான்மையுடன், பொதுஜன
வாக்கெடுப்புக்கு செல்ல வேண்டும்
என்று நீதிமன்றம் அறிவிக்கும். நிகழ்
நிலை காப்புச் சட்டம் தற்போது
நடைமுறையில் உள்ளது. இதில் ஒரு சில
குறைபாடுகள் காணப்படுகின்றன
என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.
இதற்காக முழு சட்டத்தையும் தீயிட
முடியாது. திருத்த யோசனைகளை
முன்வையுங்கள் பேச்சின் ஊடாக தீர்வு
காணலாம் .எந்த சட்டத்தையும்
குறைபாடுகள் இல்லாமல் இயற்ற
முடியாது - என்றார். (ஐ)

# அச்சத்தில் விவசாயிகள்

மட்டக்களப்பு, பெப். 09

மட்டக்களப்பு - போரதீவுப் பற்று
பிரதேசத்தில் தற்போது பெரும்போக
வேளாண்மை அறுவடை இடம்பெற்று
வருகின்ற நிலையில், புதன்கிழமை
காலை காட்டுயானைகள் கூட்டம் கூட்
டமாக வயல் நிலங்களுக்குள் ஊடுருவி
நெற்பயிர்களையும் துவம்சம் செய்துள்
ளதாக அப்பகுதி விவசாயிகள் தெரிவித்
துள்ளனர்.

அத்துடன், குறித்த பிரதேசத்தில்
உள்ள வாவியை அண்மித்துள்ள பற்
றைக் காட்டுப் பகுதியில் இக்காட்டு
யானைகள் தங்கியுள்ளதால் அப்பகுதி
யில் வேளாண்மை அறுவடை வேலைக
ளில் ஈடுபட்டு வரும் விவசாயிகளும்
தொழிலாளர்களும் பெரும் அச்சத்தில்
உள்ளதாக கூறப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த
வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்
களத்தின் வெல்லாவெளி காரியாலய
அதிகாரிகள், "கிராமங்களை அண்மித்து
காட்டு யானைக் கூட்டம் நிற்பதாக
தமக்குத் தகவல் கிடைத்துள்ளது.
யானைகளைப் பகல் வேளையில்
அப்புறப்படுத்த முடியாது, அதனை
இரவு வேளையிலேயே வெளியேற்று
வதற்குரிய நடவடிக்கை எடுத்துள்
ளோம்" என தெரிவித்துள்ளனர் .

(அ)

## அரசமைப்பு...

என்பதை நீதியமைச்சர் ஏற்றுக்கொண்
டுள்ளார். ஆகவே, விசேட கட்சித் தலை
வர் கூட்டத்தை ஏற்பாடு செய்யுங்கள்
என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம
தாஸ சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்
கிழமை இடம்பெற்ற அமர்வின் போது
விசேட கூற்றை முன்வைத்து உரையாற்
றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்
டார்.

மேலும், நிகழ்நிலை காப்புச்
சட்டமூலம் தொடர்பில் உயர்நீதி
மன்றம் முன்வைத்த திருத்தங்களுக்கு
அப்பாற்பட்ட வகையில் தான் சட்ட
மூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது. சட்ட
மூலத்தின் 11,16,19,20 ,27 உள்ளிட்ட
சரத்துக்கள் உட்பட பெரும்பாலான
சரத்துகள் திருத்தம் செய்யப்பட வேண்
டும். அத்துடன், 16 மற்றும் 19 ஆவது
சரத்துக்கள் நீக்கப்பட வேண்டும் என்று
உயர்நீதிமன்றம் யோசனைகளை முன்
வைத்துள்ளது.

சட்டமூலம் தொடர்பில் உயர்நீதி
மன்றம் முன்வைக்கும் யோசனைகளை
முறையாகச் செயற்படுத்த வேண்டியது
பாராளுமன்றத்தின் கடமையாகும்.
ஆனால், அரசமைப்புக்கும், உயர்நீதிமன்
றத்துக்கும் அப்பாற்பட்ட வகையில்
ஆளும் தரப்பினரின் ஆதரவுடன் இந்த
சட்டமூலம் சட்டமாக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மீதான நம்பிக்கை மலி
னப்படுத்தப்பட்டுள்ளது. அரசமைப்
புக்கு எதிரான செயல்பாட்டுக்கு
சபாநாயகர் சிம்மாசனத்தில் அமர்ந்த
வாறு ஒத்தாசை வழங்கியுள்ளார்.
சட்டமூலம் மீதான இறுதி விவாதத்
தின்போது நாங்கள் வாக்கெடுப்பு
கோரினோம். ஹெட்செட்டை காதில்
அணிந்து கொண்டு எதிரணியினர்
குறிப்பிடுவது கேட்காதது போல்
இருக்கும் புதிய பழக்கத்தை சபாநாயகர்
தற்போது கடைப்பிடிக்கிறார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாய
கர் மகிந்த யாப்பா அபேவர்த்தன,

உயர்நீதிமன்றம் முன்வைத்த
திருத்தங்கள் செயல்படுத்தப்படாததற்
கும் எனக்கும் எவ்வித தொடர்பும்
கிடையாது. என்னைத் தொடர்புப்படுத்
தாதீர்கள் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்
கட்சித் தலைவர், சட்டமூலம் மீதான
இறுதி விவாதம் இடம்பெற்ற போது
நீங்கள்தான் சபைக்குத் தலைமை தாங்கி
னீர்கள், அரசமைப்பு மீறல் செயல்
பாட்டுக்கு நீங்கள் பொறுப்புக் கூற
வேண்டும்.

நிகழ்நிலை காப்பு சட்டத்தில்
குறைபாடுகள் காணப்படுகின்றன
என்பதை நீதியமைச்சர் ஏற்றுக்
கொண்டுள்ளார். ஆகவே உடனடியாக
விசேட கட்சித் தலைவர் கூட்டத்தை
ஏற்பாடு செய்து பேச்சில் ஈடுபடுங்கள்
இந்த சட்டத்தில் பாரதூரமான ஏற்பாடு
கள் காணப்படுகின்றன. அவற்றை
திருத்தம் செய்யுங்கள் - என்றார். (ஐ)

## பலாலி...

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
இதில், உயர் பாதுகாப்பு வலயமாக
இருந்து விடுவிக்கப்பட்ட குரும்பசிட்டி ,
கட்டுவன், குப்பிளான் கிராமங்களின்
பகுதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன
என்று கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் குறித்த
கிராமங்களில் கிராம மட்ட அமைப்பு
கள் கூடி காணி சுவீகரிப்பு குறித்து
ஆராய்ந்து வருகின்றன. அத்துடன்,
மக்களை திரட்டி போராட்டங்களை
நடத்தவும் தீர்மானித்துள்ளன.

போராட்டத்துக்கு முன்னதாக
அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா , வட
மாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட செய
லர் ஆகியோரை சந்தித்து தமது எதிர்ப்பு
- கோரிக்கையை முன்வைக்கவும் அவை
தீர்மானித்துள்ளன. (ஐ)

## தெற்காசியாவில்...

அலகுகளைப் பயன்படுத்தும் வீட்டை
விட 50 சதவீதம் அதிகமாகும். 300
அலகுகளை பயன்படுத்தும் ஒரு வீடு
செலுத்த வேண்டிய கட்டணம் 97
சதவீதம் அதிகமாகும்.

இலங்கையில் மின்சார கட்டண
அதிகரிப்பு சர்வதேச நாணய நிதியம்
நாட்டுக்கு வழங்கிய உறுதிப்பாட்டுடன்
தொடர்புடையது என்றும் வெரிட்டே
றிசேர்ச் தெரிவித்துள்ளது.

இந்த மாதம் திட்டமிடப்பட்ட வரி
குறைப்பின் கீழ், அது 4 சதவீதத்தால்
குறைக்கப்பட்டுள்ளது. இருந்த
போதிலும், தெற்காசிய பிராந்தியத்தில்
இலங்கையர்களே அதிக மின்சார
கட்டணத்தை செலுத்துகின்றனர்
என்றும் கூறப்பட்டது. (ஐ)

## ஆஸி...

நாட்டில் எரிபொருள் இறக்குமதி -
விநியோகம் - விற்பனைக்கு சினோபெக்
நிறுவனத்துக்கு அனுமதி அளிக்கப்பட்
டது. இதனால், எரிபொருள் இறக்கு
மதிக்காக வருடாந்தம் செலவிடப்படும்
50 கோடி டொலரை அரசாங்கத்தால்
மீதப்படுத்த முடிந்துள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்
தாபனம், லங்கா ஐ. ஓ. சி. மற்றும்
சினோபெக் ஆகிய நிறுவனங்களுக்கு
இடையில் போட்டி காணப்படுகிறது.
இதன் மூலம் இனிவரும் காலங்களில்
எரிபொருள் விலைகளில் மக்களுக்கு
சிறந்த நிவாரணம் கிடைக்கும் என்று
நம்புகின்றோம்.

தற்போது அமெரிக்காவின் ஆர். எம்.
பார்க் நிறுவனம் 30 இலட்சம் டொலரை
வைப்பு செய்துள்ளது. அனுமதிப்பத்திர
கட்டணமாக 20 இலட்சம் டொலரும்
நிலையான வைப்பாக 10 இலட்சம்
டொலரும் வைப்பு செய்யப்பட்டுள்ளன.
எனவே, விரைவில் இந்த நிறுவனம்
அதன் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்
என்று எதிர்பார்க்கின்றோம்.

ஆனால், அவுஸ்திரேலியாவின்
யுனைற்றட் பெற்றோலிய நிறுவனம்
கால அவகாசம் கோரியுள்ளது. எனினும்
எந்த வைப்புகளையும் செய்யவில்லை.
எனவே, இந்த நிறுவனம் செய்து கொள்
ளப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு அமைய
செயல்படாவிட்டால் இந்தத் திட்டத்
திலிருந்து அதனை நீக்கி விட்டு, ஏனை
யோருக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கு
அமைச்சு மட்டத்தில் பேச்சுகள் முன்னெ
டுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்
பில் ஆராய்ந்து குறித்த நிறுவனத்தை
நீக்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம் - என்
றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# தாமதமான காற்றாலை திட்டங்கள் அடுத்த மாதத்திற்குள் முன்னேற்றம்!

## ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையிடம் காஞ்சன

கொழும்பு, பெப்ரவரி 09

**இந்தியாவின் அதானி கிரீன் எனர்ஜி லிமிடெட் மூலம் நிர்மாணிக்கப்படும் தாமதமான இரு காற்றாலை ஆற்றல் திட்டங்களில் அடுத்த மாதத்திற்குள் முன்னேற்றம் அடையும் என்று இலங்கை நம்பிக்கை கொண்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் தெரிவித்தார்.**



பணப் பற்றாக்குறை மற்றும் எரிபொருள் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தெற்காசிய தீவு தேசம், இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் செலவினங்களின் அதிகரிப்புக்கு எதிராக பசுமை மின் உற்பத்தியை விரைவுபடுத்த முயற்சிக்கிறது.

எனினும், திட்டத்திற்கான விலை நிர்ணயம் மற்றும் ஆலை செயல்திறன் ஆகியவற்றில் உள்ள சர்ச்சைகள் காரணமாக காற்றாலை திட்டங்கள் இன்னும் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

கோவாவில் நடைபெற்ற இந்திய எரிசக்தி வார நிகழ்வில் கலந்து கொண்ட மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு இது குறித்து அளித்த செவ்வியில்,

ஒருவேளை அடுத்த நான்கு வாரங்களில், பேச்சுவார்த்தை செயல்முறையில் சில முடிவுகளைக் காண்போம். மேலும் பரிமாற்ற பாதைகளுக்கான மற்றொரு பேச்சுவார்த்தையும் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

எனவே மார்ச் மாதத்திற்குள் இது தொடர்பான திட்டங்கள் முன்னேற்றம் அடையும் என்று நம்புவதாக கூறினார்.

2023 பெப்ரவரியில் காற்றாலை திட்டங்களில் 442 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்வதற்கான அனுமதிகளை பெற்ற அதானி நிறுவனம் இந்த கருத்துக்கான கோரிக்கைக்கு உடனடியாக பதிலளிக்கவில்லை என்று ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

நீர் மின்சாரம், நிலக்கரியில் இயங்கும் ஆலைகள் மற்றும் எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்கள் ஒவ்வொன்றும் இலங்கையின் மின்சார உற்பத்தியில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கைக் கொண்டுள்ளன.

புதிய நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தி திறனை அதிகரிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது மற்றும் 2030 ஆம் ஆண்டளவில் அதன் 70 வீத மின்சாரத்தை புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து உற்பத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அண்டை நாடான இந்தியா அண்மையில் இலங்கைக்கு இரண்டு ஆலைகளில் மின்சாரம் உற்பத்தி செய்ய திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை வழங்க முன்மொழிந்தது.

நவம்பர் மாதம், அம்பாந்தோட்டையில் 4.5 பில்லியன் டொலர் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான சீனாவின் சினோபெக்கின் முன்மொழிவுக்கு இலங்கை ஒப்புதல் அளித்தது, அங்கு சீனா ஒரு துறைமுகத்தை நிர்மாணித்தது.

இது குறித்து அமைச்சர், ஒப்பந்தத்தின் படி நில அனுமதி, நீர் இருப்பு, வரி மற்றும் சலுகைகள் குறித்து சினோபெக் கோரிய விளக்கங்களை அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் விஜேசேகர கூறினார். (அ)

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவுஸ்திரேலியாவுக்குப் பயணம்!



கொழும்பு, பெப். 09

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அழைப்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவுஸ்திரேலியாவிற்கு நேற்று வியாழக்கிழமை பயணமானார்.

அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் இன்று மற்றும் நாளை இடம்பெறவுள்ள 7ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் பயணித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது

இந்த மாநாட்டில் இலங்கைக்கான முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஜனாதிபதி முக்கிய உரையொன்றையும் ஆற்றவுள்ளதாகவும் மேலும் அவுஸ்திரேலிய பிரதமர், அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## 19 இந்திய மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், பெப். 09

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்த குற்றச்சாட்டில் குறித்த 19 பேரும் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 2 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படை முகாமில் தங்கவைக்கப்பட்டனர்.

நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட குறித்த மீனவர்கள், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ)

## நாமல் அயோத்தி விஜயம்!



கொழும்பு, பெப். 09

இரண்டு நாள் விஜயமாக அயோத்தி ராமர் கோவிலுக்கு பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று வெள்ளிக்கிழமை மாலை அவர் ராமர் கோவிலில் சிறப்பு தரிசனம் மற்றும் பூசை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது அவர் அயோத்தி மற்றும் டில்லியில் உயரதிகாரிகளை சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## சிறைக்காவலர் மீது தாக்குதல்!

கொழும்பு, பெப். 09

வெலிக்கடை விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் தாக்கியதாகல் சிறைக்காவலர் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தாக்குதலினால் வலது கையில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் விளக்கமறியலில் சிறைச்சாலையின் பொறுப்பதிகாரியின் ஆலோசனையின் பேரில் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார். (அ)

## பெலியத்தை ஐவர் கொலை:
## சந்தேகநபரான சிப்பாயின் மனைவி, தந்தைக்கு மறியல்!

கொழும்பு, பெப். 09

பெலியத்தயில் இடம்பெற்ற ஐவர் படுகொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரின் மனைவி மற்றும் தந்தை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேக நபரான முன்னாள் கடற்படை சிப்பாயின் மனைவி மற்றும் அவரது தந்தை ஆகியோர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், அவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, அவர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அத்தனகல்லை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த ஜனவரி 22 ஆம் திகதி பெலியத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 'எமது மக்கள் கட்சி' தலைவர் சமன் பெரேரா உள்ளிட்ட ஐவர் உயிரிழந்தனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 10இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## இந்தியாவிற்கு விஜயம் செய்ய ஐ.ம.சக்தியும் முயற்சி

கொழும்பு, பெப். 09

தேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமாரதிசநாயக்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் அது போன்றதொரு வாய்ப்பை ஐக்கிய மக்கள் சக்தியும் கோரியுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க இந்தியாவிற்கு ஐந்து நாள் விஜயத்தினை மேற்கொண்டுள்ளார். இந்த விஜயத்தின் போது அவர் இந்திய வெளிவிவகார அமைச்சர் உட்பட முக்கிய தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலிற்கு முன்னர் இவ்வாறான விஜயமொன்றின் மூலம் தேசியமக்கள் சக்திக்கு கிடைக்கக்கூடிய சாதகத் தன்மையை கருத்திலெடுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளது.

இதற்கு இந்தியா சாதகமாக பதிலளித்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

## அம்பாறை செயலகத்திற்கு முன் விவசாயிகள் பெரும் ஆர்ப்பாட்டம்

அம்பாறை, பெப். 09

பெரும்போக வேளாண்மை அறுவடையினை தொடர்ந்து தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் குறைந்த விலையில் நெல்லை கொள்வனவு செய்வதால் தாம் மிகுந்த நட்டத்தை எதிர்நோக்கி வருவதாகவும், அரசாங்கம் கிலோ நெல்லின் விலையை 130 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனவும் கோரி பதாதைகளுடன் அம்பாறை மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலமையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்ட ஈட்டினையும் பெற்றுத் தர வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். (அ)



இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மனிதகுலத்திற்கு எதிரான போரில் சர்வதேச சட்ட மீறல்: இஸ்ரேலுடன் அமெரிக்க- மேற்குலக முரண்பாடு!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



நீண்ட காலமாக அமெரிக்காவுக்கு இஸ்ரேலும், இஸ்ரேலுக்கு அமெரிக்காவும் இணை பிரியாத அல்லது பிரிய முடியாத பந்தம் இருந்து வருகிறது.

மத்தியக் கிழக்கில் அமெரிக்காவுக்கு உறுதுணையான, நம்பகமான பங்காளியாக இஸ்ரேல் இருப்பதில் அரபு நாடுகளுக்கு பாரிய ஆட்சேபணை எதுவும் இல்லை என்றே புலப்படுகிறது. ஆனாலும் தன்னை அங்கீகரிக்காத அரேபிய நாடுகளுடனும் அமெரிக்கா நட்புறவு பாராட்டுவதைத் தடுக்க இஸ்ரேல் முயலவில்லை என்பதும் உண்மையே.

பனிப்போர் காலத்தில் மத்திய கிழக்கில் நிகழ்ந்த சில மாற்றங்களால் காலப் போக்கில் அமெரிக்கா இஸ்ரேலைத் தாங்கி நிற்பது பாரியளவில் அதிகரித்தது. இதற்கு அமெரிக்காவில் அந்நாட்டு வாழ் யூதச் சமூகமும் முக்கியக் காரணம்.

அமெரிக்க நாடாளுமன்றம் இது குறித்து விவாதித்துள்ளதும் அதற்குப் பின்னால் அமெரிக்க வாழ் யூதச் சமூகத்தின் செல்வாக்கு இருப்பதும் வெளியிடப்பட்ட ஆவணங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

அமெரிக்க கைப்பிள்ளையான இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையானது முன்னெப்போதும் இல்லாத வகையில் காசாவில் உயிர்கள் மற்றும் உடமைகளுக்கு அழிவை ஏற்படுத்தியிருந்தாலும், ஹமாஸை அகற்றுவதற்கோ அல்லது நீண்ட காலத்திற்கு இஸ்ரேலின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அரசியல் தீர்விற்காகவோ செயல்படக்கூடிய உத்தி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

**இஸ்ரேல் மூலோபாய பின்னடைவு:**

தற்போது அமெரிக்க மற்றும் ஐரோப்பிய அரசாங்கங்கள், இஸ்ரேலிய நடவடிக்கைக்கு பின்னால் ஒரு மூலோபாய பின்னடைவு உள்ளது என்று புரிந்து கொள்கிறார்கள். ஆயினும் இத்தகைய விமர்சனங்களை இஸ்ரேலிய அரசும், அதிகாரிகள் தொடர்ந்து நிராகரித்து வருகின்றனர்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக, லண்டனில் உள்ள இஸ்ரேலிய தூதரகம் சர்வதேச சட்டத்திற்கு இப்போர் உட்பட்டது என்று கூறியுள்ளது. போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களைச் செய்யும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கு எதிராக இஸ்ரேல் தொடர்ந்து செயல்படுகிறது என்றும் கூறியுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் பணியாற்றும் 800 க்கும் மேற்பட்ட அரச அதிகாரிகள், இஸ்ரேல்-காசா போரில் தங்கள் சொந்த அரசாங்கங்களின் கொள்கைகள் “சர்வதேச சட்டத்தின் கடுமையான மீறல்கள்” என்று எச்சரிக்கும் “அட்லாண்டிக் அறிக்கை”யில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்த அட்லாண்டிக் அறிக்கையில், இந்த நூற்றாண்டின் மிக மோசமான மனித பேரழிவுகளில் ஒன்றிற்கு உடந்தையாக இருக்கும் அபாயம் உள்ளது என்று கூறியுள்ளது. இஸ்ரேலின் சில முக்கிய மேற்கத்திய நட்பு நாடுகளின் அரசாங்கங்களுக்குள் கணிசமான அளவிலான கருத்து வேறுபாடுகளின் சமீபத்திய அறிகுறி இதுவாகும்.

இவ் அட்லாண்டிக் அறிக்கையில் கையொப்பமிட்ட ஒருவர், 25 ஆண்டுகளுக்கும் மேலான தேசிய பாதுகாப்பு அனுபவமுள்ள அமெரிக்க அரசாங்க அதிகாரியாவார். தங்கள் கவலைகளை தொடர்ந்து இஸ்ரேல் நிராகரிப்பதாக அவர் கூறியுள்ளார்.

**800க்கும் மேற்பட்ட அமெரிக்கா, ஐரோப்பிய இராஜாங்க அதிகாரிகள், இஸ்ரேல்-காசா போரில் தங்கள் சொந்த அரசாங்கங்களின் கொள்கைகள் ‘சர்வதேச சட்டத்தின் கடுமையான மீறல்கள்” என்று எச்சரிக்கும் ‘அட்லாண்டிக் அறிக்கை”யில் கையெழுத்திட்டுள்ளனர்.**



**சர்வதேச சட்ட மீறல்கள்:**

அத்துடன் இந்த அறிக்கையில் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பல அரசு ஊழியர்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

காசாவில் இஸ்ரேல் தனது இராணுவ நடவடிக்கைகளில் எல்லைகள் இல்லை என்று கூறுகிறது. இப்போர் பல்லாயிரக் கணக்கான குடிமக்கள் இறப்புகளுக்கு வழிவகுத்தது. மற்றும் உதவிகளை வேண்டுமென்றே தடுப்பது, ஆயிரக்கணக்கான குடிமக்களை பட்டினி மற்றும் மெதுவாக இறக்கும் அபாயத்தில் வைத்துள்ளது என இந்த அட்லாண்டிக் அறிக்கை கூறுகிறது.

மேற்கத்திய அரசாங்கங்களின் கொள்கைகள் சர்வதேச சட்டத்தின் கடுமையான மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் இனச் சுத்திகரிப்பு அல்லது இனப்படுகொலை ஆகியவற்றிற்கு பங்களிக்கும் அபாயம் உள்ளது என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

**அரபு அமெரிக்க வாக்கு இழப்பு:**

அல்ஜீரியா மற்றும் சிரியாவுக்கான முன்னாள் அமெரிக்க தூதர் ராபர்ட் ஃபோர்டு கூற்றின்படி, கடந்த 40 ஆண்டுகளில் வெளியுறவுக் கொள்கையைப் பார்த்த எனது அனுபவத்தில் இது தனித்துவமானது. இஸ்ரேலுக்கான ஜோ பைடனின் ஆதரவு அரபு அமெரிக்கர்களிடையே அவரின் வாக்குகளை இழந்துவிட்டார் என்றும் கூறியுள்ளார்.

ஈராக் படையெடுப்பிற்கு வழிவகுத்த தவறான உளவுத்துறை 2003 இல் அமெரிக்க நிர்வாகத்திற்குள் இருந்த கவலைகளுடன் அவர் அதை ஒப்பிட்டுள்ளார். ஆனால் இந்த முறை பல அதிகாரிகள் அமைதியாக இருக்க விரும்பவில்லை என்றும், காசா போரின் சிக்கல்கள் மிகவும் தீவிரமானவை மற்றும் தாக்கங்கள் மிகவும் தீவிரமானவை, அவை பகிரங்கமாக சொல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

மேலும் பாலஸ்தீனியர்களின் மரணங்களை ஆபத்தில் ஆழ்த்துவது மட்டுமல்லாமல், மற்றும் இஸ்ரேலின் சொந்த பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை சீர்குலைவை சுட்டிக்காட்டியுள்ளார்.

**இஸ்ரேலின் கடுமையான இராணுவ நடவடிக்கை:**

(16ம் பக்கம் பார்க்க)





# எம்.ஜி.ஆர்., விஜயகாந்த் பாணியை பின்பற்றாமல் விஜய் நடிப்பதை உடனே நிறுத்துவது ஏன்?

முரளிதரன் காசி விஸ்வநாதன்



அரசியல் கட்சியைத் துவங்கியிருக்கும் நடிகர் விஜய், தனது அடுத்த திரைப்படத்துடன் திரையுலகை விட்டு விலகுவதாக அறிவித்திருக்கிறார். இது தமிழ் திரைத் துறையை எந்த அளவுக்கு பாதிக்கும்?

தமிழக வெற்றி கழகம் என்ற பெயரில் புதிய அரசியல் கட்சியைத் துவங்கியிருப்பதாகவும் அந்தக் கட்சி 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுமென்றும் அறிவித்திருக்கும் நடிகர் விஜய், “அரசியல் என்பது எனக்கு இன்னொரு தொழில் அல்ல. அரசியல் என்பது பொழுதுபோக்கு அல்ல. எனவே ஏற்கனவே நான் ஒப்புக்கொண்டுள்ள இன்னொரு திரைப்படம் சார்ந்த கடமைகளை, கட்சி பணிகளுக்கு இடையூறு இல்லாத வகையில் முடித்துவிட்டு முழுமையாக மக்கள் சேவைக்கான அரசியலில் ஈடுபட உள்ளேன்” என்று கூறியிருக்கிறார்.

விஜய் தற்போது வெங்கட் பிரபு இயக்கத்தில் ‘த கிரேட்டஸ்ட் ஆஃப் ஆல் டைம்’ என்ற படத்தில் நடித்து வருகிறார். யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கும் இந்தப் படத்தில் பிரசாந்த், பிரபுதேவா, ஸ்நேகா, லைலா உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் படப்பிடிப்பு தற்போது நடைபெற்றுவருகிறது. இது விஜய் நடிக்கும் 68வது படம்.



இந்தப் படத்திற்குப் பிறகும் ஒரு படம் நடிக்கப்போவதாக விஜய் சொல்லியிருக்கிறார். அந்தப் படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்புகள் ஏதும் வெளியாகவில்லை. இந்தப் படத்தை கார்த்திக் சுப்புராஜ் இயக்கலாம் என அதிகாரபூர்வ மற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் படத்திற்குப் பிறகு நடிக்கப் போவதில்லை என தற்போது விஜய் அறிவித்திருக்கிறார்.

தமிழ் சினிமாவின் முன்னணி நட்சத்திரமாக இருக்கும் விஜயின் இந்த அறிவிப்பு தமிழ் சினிமாவை குறிப்பாக திரையரங்குகளை எந்த அளவுக்கு பாதிக்கும் என்ற கேள்வி எழுந்திருக்கிறது.

### தமிழ் சினிமாவுக்கு என்ன பாதிப்பு?

கோவிட் பரவல் மற்றும் ஓடிடிகளின் வருகைக்குப் பிறகு, தமிழ்நாடு முழுவதுமே திரையரங்குகள் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றன. ஆயிரக்கணக்கில் இருந்த திரையரங்குகளின் எண்ணிக்கை தற்போது 800க்குள் சுருங்கியிருக்கிறது.

எல்லா வாரங்களிலும் திரைப்படங்கள் வெளியாகின்றன என்றாலும்கூட, அப்படி வெளியாகும் படங்களில் பல 2-3 நாட்கள்கூட ஓடுவதில்லை என்பதால், அந்தப் படங்களைத் திரையிட திரையரங்குகள் ஆர்வம் காட்டுவதேயில்லை. இதனால், பல வாரங்கள் திரையரங்குகள் மூடியே கிடக்கின்றன.

2000கள் வரை சென்னை மட்டுமல்லாமல் இரண்டாம் நிலை நகரங்களில்கூட, தமிழ் மட்டுமல்லாமல் இந்தி, ஆங்கிலப் படங்களும் தொடர்ச்சியாக வெளிவந்தன. ஆனால், 2020க்கு சற்று முன்பிருந்து இந்தப் போக்கு மாற ஆரம்பித்தது. தமிழில் வெளிவரும் பெரிய நடிகர்களின் படங்களுக்கு மட்டுமே திரையரங்குகளுக்கு ரசிகர்கள் வந்தார்கள்.

தற்போதைய சூழலில் ரஜினி, கமல், விஜய், அஜீத், தனுஷ், சிம்பு, சூர்யா, சிவகார்த்திகேயன் உள்ளிட்ட சில நடிகர்களின் படங்களுக்கு மட்டுமே பெரிய அளவில் முதல் நாள் ரசிகர்கள் திரையரங்குகளில் குவிகிறார்கள். மற்ற நடிகர்களின் படங்கள் நன்றாக இருப்பதாக செவிவழி விமர்சனம் பரவினால் கூட்டம் வருகிறது. ஆனால், அதுவரை அந்தப் படம் திரையரங்கில் தாக்குப்பிடித்திருக்க வேண்டும்.

திரையரங்குகளுக்கு ரசிகர்களை அழைத்து வரும் இந்தப் பெரிய நடிகர்களின் படங்களும் அடிக்கடி வருவதில்லை என்பதுதான் திரையரங்குகளின் பிரச்னை. ரஜினி, கமல் போன்ற நடிகர்கள் வருடத்திற்கு ஒரு படம் வெளிவரும் வகையில் தான் நடிக்கிறார்கள். அஜீத்தைப் பொறுத்தவரை ஒரு படத்திற்கு ஒன்றரை ஆண்டுகள் எடுத்துக்கொள்கிறார். விஜய், தனுஷ், சூர்யா, சிவகார்த்திகேயன் போன்றவர்கள் ஒன்றரை ஆண்டுகளில் இரண்டு படங்கள் நடிக்கிறார்கள். இந்த நிலையில் தான் இனிமேல் திரைப்படங்களில் நடிக்கப் போவதில்லை என அறிவித்திருக்கிறார் விஜய். இது எந்த அளவுக்கு திரையரங்குகளைப் பாதிக்கும்?

### அதிகபட்ச வர்த்தகத்தைத் தரும் நடிகராக இருக்கும் விஜய்

விஜய் படங்களில் நடிப்பதை நிறுத்துவது பாதிப்பை ஏற்படுத்துமா இல்லையா என்பதை, சில நாட்களுக்கு முன்பாக நடந்த ஒரு சம்பவத்தை வைத்துத் தெரிந்து கொள்ளலாம் என்கிறார் மூத்த சினிமா பத்திரிகையாளரான அந்தணன்.

‘சில நாட்களுக்கு முன்பாக திரையரங்கு உரிமையாளர்கள் ஒரு கூட்டம் போட்டார்கள். அந்தக் கூட்டத்தில் விஜய், அஜீத் போன்ற பெரிய நடிகர்கள் வருடத்திற்கு 2-3 படங்களை நடிக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். ஏனென்றால் பெரிய நடிகர்களின் படங்களுக்குத்தான் ரசிகர்கள் வருகிறார்கள். கண்டீன், பார்க்கிங் என எல்லா வர்த்தகமும் அப்போதுதான் முழுமையாக நடக்கும்.





இதில் விஜய்தான் அதிகபட்ச வர்த்தகத்தைத் தரும் நடிகராக இருக்கிறார். அவரது ஒவ்வொரு படமும் சுமார் 500 கோடி ரூபாய்க்கு வர்த்தகமாகிறது. வருடத்திற்கு இரண்டு படம் நடித்தால், கிட்டத்தட்ட 1,000 கோடி ரூபாய். அவர் திடீரென நடிப்பதை நிறுத்தினால், இந்த 1,000 கோடி ரூபாய் வர்த்தகம் நின்று போகும்” என்கிறார் அந்தணன்.

தயாரிப்பாளரான தனஞ்செயனும் இதே கருத்தை எதிரொலிக்கிறார். ‘ஏற்கனவே திரையரங்குகள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. சிறிய பட்ஜெட் படங்களைத் திரையிட்டால் ஆட்களே வருவதில்லை. பெரிய பட்ஜெட் படங்களுக்கு மட்டும்தான் வருகிறார்கள். சூழல் அம்மாதிரி இருக்கும்போது திடீரென ஒரு பெரிய நடிகர் நடிப்பதை நிறுத்துவது பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

லியோ படம் வெளிவந்து எவ்வளவு நாட்களாகின்றன? ஆனால், இப்போது வரை அந்தப் படம்தான் அதிக வசூலைச் செய்த படமாக இருக்கிறது. நிலைமை இம்மாதிரி இருக்கும்போது அவர் படங்களில் நடிப்பதை நிறுத்துவதாகச் சொல்வது ஒரு அதிர்ச்சியை நிச்சயம் ஏற்படுத்தும்” என்கிறார் தனஞ்செயன்.

ஆனால், திரையரங்க உரிமையாளர்கள் அப்படி கருதவில்லை. திரையரங்குகள் ஏற்கனவே மோசமான நிலையில் இருக்கும் நிலையில், இது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது எனக் கருதுகிறார்கள் அவர்கள்.

“விஜய் திரையுலகை விட்டுச் செல்வது என்பது வருத்தத்திற்கு உரியதுதான். ஆனால், அது பெரிதாக எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது. அவர் வருடத்திற்கு ஐந்தாறு படங்களிலா நடிக்கிறார். அவர் நடித்து வருடத்திற்கு ஒரு படம் வருகிறது. சில சமயங்களில் அதைவிட கூடுதல் கால அவகாசத்தை எடுத்துக் கொள்கிறார்கள். ஆகவே அந்தப் படத்தை மட்டும் நம்பி திரையரங்குகள் இயங்குவதில்லை. இப்போது அந்த ஒரு படம் வராமல் போவது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது” என்கிறார் தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர் சங்கத்தின் தலைவரான திருப்பூர் சுப்பிரமணியன்.

### திரைத்துறையில் இருந்துகொண்டே அரசியலில் ஈடுபட்ட நடிகர்கள்

பொதுவாக அரசியலுக்கு வரும் நடிகர்கள், நடிப்பதை உடனடியாக நிறுத்திவிடுவதில்லை. எம்.ஜி.ஆர். தி.மு.கவிலிருந்த படியே படங்களில் நடித்ததோடு, அந்தப் படங்களில் தனது கட்சியையும் முன்னிறுத்தி வந்தார். 1972 அக்டோபரில் அவர் தனிக்கட்சி ஆரம்பித்த பிறகும்கூட, நடிப்பதை நிறுத்தவில்லை. அவர் தனிக்கட்சி ஆரம்பித்த பிறகு, உலகம் சுற்றும் வாலிபன், பட்டிக்காட்டு பொன்னையா, நேற்று இன்று நாளை, உரிமைக் குரல், சிரித்து வாழ வேண்டும், நினைத்ததை முடிப்பவன், நாளை நமதே உள்ளிட்ட படங்களில் நடித்தார். அவர் முதலமைச்சரான பிறகே படங்களில் நடிப்பதை நிறுத்திக்கொண்டார்.

தனிக் கட்சி ஆரம்பித்த பிறகு, தனது படங்களை புதிய கட்சியின் பிரசார வாகனமாகவும் மிக வெற்றிகரமாகப்

(16ம் பக்கம் பார்க்க)

# மனிதகுலத்திற்கு எதிரான போரில் சர்வதேச சட்ட மீறல்:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலின் தற்போதய இராணுவ நடவடிக்கைகள் 9-11 முதல் பெற்ற அனைத்து முக்கியமான பயங்கரவாத எதிர்ப்பு நிபுணத்துவத்தையும் புறக்கணித்து விட்டது. இராணுவ நடவடிக்கை ஹமாஸை தோற்கடிக்கும் இஸ்ரேலின் இலக்குக்கு பங்களிக்கவில்லை, அதற்கு பதிலாக ஹமாஸ், ஹிஸ்புல்லா அமைப்பை பலப்படுத்தியுள்ளது.

இனப்படுகொலைச் செயல்களைத் தடுக்க இஸ்ரேல் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்ய வேண்டும் என்று தென்னாப்பிரிக்காவால் தொடரப்பட்ட வழக்கில் ஐ.நா.வின் சர்வதேச நீதிமன்றம் கடந்த வாரம் அறிவித்தது.

இதேவேளை இங்கிலாந்து வெளியுறவு அலுவலகம், காஸாவில் சண்டையை விரைவில் முடிவுக்கு கொண்டுவர கோரியுள்ளது. சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கு உட்பட்டு செயல்படவும் இஸ்ரேலை வேண்டியுள்ளது.

**பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கடும்போக்கு:**

இஸ்ரேல் பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகு ஹமாஸ் மீதான முழு இராணுவ அழுத்தம் மட்டுமே பணயக் கைதிகளை மேலும் விடுவிக்கும் என்று கூறியுள்ளார். அதே நேரத்தில் நீண்ட போரின் பின்னர் ஹமாஸின் கட்டளை மையங்கள், ஆயுத தளங்கள் மற்றும் பணயக் கைதிகளை வைத்திருப்பதற்கான வசதிகள் உட்பட ஹமாஸ் குழுவால் பயன்படுத்தப்படும் குறிப்பிடத்தக்க நிலத்தடி உள்கட்டமைப்பை இஸ்ரேல் அழித்து விட்டது என்றும் கூறியுள்ளார்.

ஆயினும் வேண்டுமென்றே சிவிலியன்களை குறிவைப்பதாக கூறப்படும் கூற்றை இஸ்ரேல் பலமுறை நிராகரித்துள்ளது. ஹமாஸ் சிவிலியன் உள்கட்டமைப்புகளிலும் அதைச் சுற்றியும் மறைந்திருப்பதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

2007ல் இருந்து ஹமாஸால் ஆளப்பட்டு இஸ்ரேல் மற்றும் எகிப்தால் முற்றுகையிடப்பட்ட காசா பகுதியில் உள்ள சுகாதார அதிகாரிகளின் கூற்றுப்படி, போர் தொடங்கியதில் இருந்து, 27,750க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் குறைந்தது 65,000 பேர் காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 9,000 பேர் ஹமாஸ் போராளிகள் என்று இஸ்ரேலிய அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் அந்த எண்ணிக்கைக்கான ஆதாரங்களை வழங்கவில்லை. ●

# எம்.ஜி.ஆர்., விஜயகாந்த் பாணியை பின்பற்றாமல்...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தினார் எம்.ஜி.ஆர். ‘நேருக்கு நேராய் வரட்டும் நெஞ்சில் துணிவிருந்தால்” (மீனவ நண்பன்), ‘ஊருக்கெல்லாம் வெளிச்சம் போட கொடுத்த பணத்திலே, தாங்கள் வெளிச்சம் போட்டு வாழ்ந்து விட்டார் நகர சபையிலே” (நேற்று இன்று நாளை), ‘நமது வெற்றியை நாளைய சரித்திரம் சொல்லும்” (உலகம் சுற்றும் வாலிபன்) என்று தனது பாடல்களிலேயே எதிர்க்கட்சியினரைக் குறிவைத்தார் எம்.ஜி.ஆர்.

விஜயகாந்தைப் பொறுத்தவரை, கட்சி ஆரம்பிப்பதற்கு முன்பாகவே அவரது மன்றக் கொடி, திரைப்படங்களில் இடம்பெற்றது. கட்சியைத் துவங்கிய பிறகும், சுதேசி, பேரரசு, தர்மபுரி, சபரி, அரசாங்கம், மரியாதை, எங்கள் ஆசான், விருதகிரி என நடித்துக்கொண்டே இருந்தார். 2010ஆம் ஆண்டுவரை அவர் திரைப்படங்களில் நடிப்பதை நிறுத்தவில்லை.

ரஜினிகாந்தும்கூட அரசியலுக்கு வருவதாக அறிவித்த பிறகும் படங்களில் நடித்துக்கொண்டேயிருந்தார். 2017ல் தான் அரசியலுக்கு வரப் போவதாக அறிவித்த ரஜினிகாந்த், அதற்குப் பிறகு காலா, 2.0, தர்பார் ஆகிய படங்களில் நடித்தார். சட்டமன்றத் தேர்தல் நெருங்கிய நிலையில், தான் அரசியலுக்கு வரப் போவதில்லை என அறிவித்துவிட்டு முழுமூச்சாக திரைப்படங்களில் நடித்து வருகிறார்.

2018ல் மக்கள் நீதி மய்யம் என்ற கட்சியைத் துவங்கிய கமல், அதற்குப் பிறகு விஸ்வரூபம் - 2, விக்ரம் ஆகிய படங்களில் நடித்து வெளியிட்டார். இதே கால கட்டத்தில் இந்தியன் - 2 படத்திலும் நடித்தார். தற்போது அரசியலில் இருக்கும் கமல், இப்போதும் தீவிரமாக நடிப்பில் கவனம் செலுத்தி வருகிறார்.

**எம்.ஜி.ஆர்., விஜயகாந்த் பாணியை பின்பற்றாமல் விஜய் நடிப்பதை உடனே நிறுத்துவது ஏன்?**

எம்.ஜி.ஆர்., விஜயகாந்த், ரஜினிகாந்த், கமல்ஹாசன் ஆகியோருக்கும் விஜய்க்கும் ஒரு முக்கிய வித்தியாசம் இருக்கிறது. விஜயைத் தவிர்த்த மற்றவர்கள் அனைவருமே தங்கள் திரைவாழ்வின் உச்சத்தைக் கடந்த பிறகே அரசியலில் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தார்கள். ஆனால், விஜய் தன் திரைவாழ்வின் உச்சத்தில் இருக்கும் போதே திரைத்துறையை விட்டு விலகி, அரசியலில் ஈடுபடப் போவதாகச் சொல்லியிருக்கிறார்.

“விஜய் சில காலத்திற்கு விலகியிருப்பதாகச் சொல்லலாம். ஏன் முழுமையாக விலகுவதாகச் சொன்னார் என்பது புரியவில்லை. அரசியலுக்கு வந்த பல நடிகர்கள் இப்போதும் நடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதுபோல அவரும் செய்யலாம்” என்கிறார் தனஞ்சயன்.

ஆனால், தமிழ்த் திரைத்துறையின் பிரச்னை வேறு என்கிறார் திருப்பூர் சுப்பிரமணியன்.

‘தமிழ்த் திரையரங்குகளைப் பொருத்தவரை கடந்த 6 மாதங்களுக்கும் மேலாக மிகப் பெரிய சிக்கலில் இருக்கிறது. திரையரங்குகளை நடத்துவதே மிகக் கடினமான காரியமாகிவிட்டது. சென்னையில் அடுத்த சில மாதங்களில் பெரும் எண்ணிக்கையிலான திரையரங்குகளை மூடப் போகிறார்கள். கே.கே. நகரில் உள்ள நான்கு திரையரங்குகளைக் கொண்ட காம்ப்ளக்ஸ், அண்ணா சாலையில் உள்ள ஒரு திரையரங்கு ஆகியவை விரைவில் மூடப்படவிருக்கின்றன. ஓடிடி தளங்கள் வந்த பிறகு திரையரங்கிற்கு யாரும் வருவதில்லை என்பதுதான் இதற்குக் காரணம்” என்கிறார் அவர்.

ஆனால் இதில் பெரிய புதிர், சினிமா பிரபலத்தை வைத்து அரசியலில் நுழையும் விஜய், அரசியலுக்கு வந்த பிறகு தனது சினிமாவை அரசியலுக்காக பயன்படுத்தாமல், அதிலிருந்து விலக விரும்புவது ஏன் என்பதுதான். ●

